ISBN:978-81-687049-2-3

108

செந்தமிழறிஞர்கள்

திருலோக

சீதாராம்





பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/143-%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8B%E0%AE%95-%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%8D_1917

செந்தமிழ்சிற்பிகள்

திருலோக சீதாராம்(1917 - 1973)



அறிமுகம்

திருலோக சீதாராம் என்ற திருவையாறு லோகநாதய்யர் சீதாராமன் (1 ஏப்ரல் 1917 – 23 ஆகத்து 1973) மேடைப்பேச்சாளர், சிவாஜி இதழின் ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர், இலக்கியக் கட்டுரையாளர் என பன்முக ஆளுமை கொண்டவர். செருமானிய இலக்கியவாதி எர்மன் கெசியின் 'சித்தார்த்தா' புதினத்தைத் தமிழில் 'சித்தார்த்தன்' என்று மொழிபெயர்த்து 1957 ஆம் ஆண்டு வெளியிட்டவர். மனுசுமிருதியையும் தமிழில் மொழிபெயர்த்தவர்.

இவர் பெரம்பலூருக்கு அருகிலுள்ள தொண்டைமான்துறை என்ற ஊரில், திருவையாறு லோகநாத ஐயர்–மீனாட்சி சுந்தரி என்ற தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட பெற்றோருக்கு 1917 ஏப்ரல் முதல் தேதியன்று பிறந்தார்.

நடத்திய பத்திரிகைகளின் பட்டியல்

இந்திய வாலிபன்

ஆற்காடு தூதன் (விழுப்புரத்திலிருந்து)

கிராம ஊழியன் (துறையூரிலிருந்து)

சிவாஜி (திருச்சியிலிருந்து)

நூல்கள்

உதயம் - கவிதைத் தொகுதி - புதுப்புனல் பதிப்பகம்

கந்தருவ கானம் - கவிதைத் தொகுதி - கலைஞன் பதிப்பகம் - 1967

இலக்கிய படகு - கட்டுரைத் தொகுதி - கலைஞன் பதிப்பகம்

ஜி.டி.நாயுடு வாழ்க்கை பற்றிய நூல் - அதிசய மனிதர் ஜி.டி.நாயுடு

புதுயுக கவிஞர் - புவனேஸ்வரி பதிப்பகம் - பாரதியார் கவிதைகள் பற்றி

(😊)(😊)(😊) ஒஒஒஒஒஒ (😊)(😊)(😊)

இலக்கியப் பணிகள்



காமராஜருடன் திருலோக சீதாராமன் (நன்றி: விகடன்)

திருலோக சீதாராம் மரபுக்கவிதைகளை எழுதியவர் என்னும் வகையிலும், இலக்கியக் கட்டுரைகள், பண்பாட்டுக்கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியவர் என்னும் வகையிலும், மொழிபெயர்ப்பாளர் என்னும் வகையிலும் பங்களிப்பாற்றியவர். கவிதைகளைப் படிப்பதை விட திருலோக சீதாராம் சொல்லிக் கேட்பதற்கு ரசிகர்கள் இருந்தனர்.

திருச்சி வானொலிக்கும் திருலோக சீதாராமனுக்கும் இருந்த பிணைப்பு முக்கியமானது. திருலோக சீதாராமின் 'கந்தருவகானம்' இங்கு இசைக்கோர்வையாக்கப்பட்டது. இதன் மேல் ஈர்க்கப்பட்டு முற்போக்கு எழுத்தாளர் நாகலிங்கம் தன் பெயரை 'கந்தர்வன்' என மாற்றிகொண்டார்.

1951-ல் பாரதிதாசனுக்கு மணிவிழா திருச்சியில் திட்டமிடப்பட்டதுபோது அதில் முக்கியப்பங்கு வகித்தார். தி.ஜானகிராமன், எம்.வி. வெங்கட்ராம், சிட்டி, ஜெயகாந்தன், டி.என். ராமச்சந்திரன், ஸ்வாமிநாத ஆத்ரேயன் ஆகியோர் இவரின் நண்பர்கள். வல்லிக்கண்ணன், ந. பிச்சமூர்த்தி, கரிச்சான் குஞ்சு, கு.ப.ரா, கி.வா.ஜ, அகிலன், ஜெயகாந்தன், கொத்தமங்கலம் சுப்பு, நா.பார்த்தசாரதி, இந்திரா பார்த்தசாரதி, சுகி.சுப்பிரமணியன், வாலி ஆகியோர் இவரின் அச்சகத்திலும் வீட்டிலும் என ஒன்று கூடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

கட்டுரைகள்

திருலோக சீதாராமின் 'இலக்கியப் படகு' என்னும் நூல் 'சிவாஜி' இதழில் இவர் எழுதிய முக்கியமான கட்டுரைகளின் தொகுப்பு. விகடனில் திருலோக சீதாராம் எழுதிய பாரதி பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு "புதுயுகக் கவிஞர்" என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது. 1952-ல் 'உழைப்பின் உயர்வு', 'அதிசய மனிதர் ஜி.டி.நாயுடு' ஆகிய கட்டுரைத்தொகுப்புகள் வெளியாகின. பிறரின் கவிதைகள் அடங்கிய தொகுப்பான 'புதுத்தமிழ் கவிமலர்கள்' என்ற நூலை வெளியிட்டார்.

கவிதைகள்

திருலோக சீதாராம் மரபுக்கவிதைகளை எழுதியவர். 'குருவிக்கூடு', 'உடையவர்' போன்ற நீள் கவிதைகளை திருலோக சீதாராம் எழுதியுள்ளார். 1967-ல் வெளியான 'கந்தருவ கானம்' கவிதைத் தொகுப்பு திருலோக சீதாராமுக்கு மிகவும் புகழை ஏற்படுத்தித் தந்த படைப்பு. அதன் பின் உதயம் என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார்.

மொழியாக்கம்

திருலோக சீதாராம் ஹெர்மன் ஹெஸ்ஸேயின் சித்தார்த்தா நாவலை 1957-ல் மொழிபெயர்ப்பு செய்தார். திருலோக சீதாராமின் காவியச்சாயல் கொண்ட நடையில் மொழி பெயர்க்கப்பட்ட இந்த நூலின் முதல் பதிப்பு தமிழில் 1957-ல் வெளிவந்தது. பிறகு இதன் மலிவுப்பதிப்பை ராணிமுத்து நிறுவனம் வெளியிட்டது. தமிழினி பதிப்பகம் மூன்றாம் பதிப்பை வெளியிட்டுள்ளது. 'மனுதர்ம சாஸ்திரம்' நூலையும் தமிழில் தந்துள்ளார். ருத்ர துளசிதாஸுடன் இணைந்து தெலுங்கு ஓரங்க நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

பாரதி

திருலோக சீதாராமன் பாரதியின் வேதாந்த நோக்கை முக்கியமாகக் கருதினார். வ.ரா., பாரதிதாசன், ஜீவா ஆகியோரின் வரிசையில், பாரதியின் இலக்கிய இடத்தை கவித்துவ உச்சத்தை பாடி நிறுவினார். பாஞ்சாலி சபதத்தையும், குடும்ப விளக்கையும் (பாரதிதாசன்) கதாகாலட்சேபம் போல் செய்வார். பாஞ்சாலி சபதத்தின் எல்லாப் பாத்திரங்களாகவும் அவரே மாறி, குரலால் நடிப்பார். அதற்குப் பெரிய ரசிகர் கூட்டம் இருந்தது.

இலக்கிய இடம்

சிறந்த கவிஞராக, இதழாளராக, கவிஞர்களை, எழுத்தாளர்களை ஊக்குவிப்பவராகச் செயல்பட்டவர், திருலோக சீதாராம். "திருலோக சீதாராம் என்பவர் சதா இங்கே திரிந்துகொண்டிருக்கும் சித்த புருஷர்களில் ஒருவர். அவர் நமக்குத் தோற்றம் காட்டியதும் நம்மிடம்

துலங்கியதும் ஒரு அருள்" என்று ஜெயகாந்தன் குறிப்பிட்டுள்ளார். "திருலோக சீதாராமை பாரதியின் ஆவேசம் கொண்ட ஜீவன் முக்தர் என்று சொன்னால் அது மிகையாகாது" என்கிறார், எழுத்தாளர் கரிச்சான் குஞ்சு.

"தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வீட்டிலே தெலுங்கு பேசுகிற பலர் பெரும் பங்காற்றியுள்ளனர். ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன் என்ற இரண்டு பெயர்கள் சிறப்பாகச் சொல்லப்பட வேண்டியவை. இந்த வரிசையில் தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொண்டவர் திருலோக சீதாராம்" என்கிறார், க.நா. சுப்ரமண்யம்



திருலோக சீதாராம் புத்தகங்கள்

நூல்கள்

- கந்தருவ கானம் (1967)
- உதயம் (கவிதைத் தொகுதி)
- புதுயுகக் கவிஞர் (பாரதி பற்றி)
- புதுத்தமிழ் கவிமலர்கள் (மற்றவர் கவிதைகள்)
- இலக்கியப்படகு (கட்டுரைகள்)
- உழைப்பின் உயர்வு (1952 ஜி.டி.நாயுடு பற்றிய நூல்)
- அதிசய மனிதர் ஜி.டி.நாயுடு (ஜி.டி.நாயுடு வாழ்க்கை வரலாறு)

மொழிபெயர்ப்புகள்

- சித்தார்த்தன் (1957)
- தெலுங்கு ஓரங்க நாடகங்கள்
- மனுதர்ம சாஸ்திரம்.

திருலோக சீதாராம் பற்றிய பிறரது நூல்கள்

- THE POETICAL WORKS OF TIRULOKA SITARAM WITH TRANSLATION AND NOTES - சேக்கிழார் அடிப்பொடி டி.என். ராமச்சந்திரன்
- திருலோக சீதாராம், ராஜாமாணி, சாகித்ய அகாதமி வெளியீடு

திருலோக சீதாராம்

இசை, சினிமா


https://www.sramakrishnan.com/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8B%E0%AE%95-%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%8D/

நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் ஹெர்மன் ஹெஸ்ஸேயின் சித்தார்த்தா நாவலைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர் திருலோக சீதாராம். சிறப்பான மொழியர்ப்பு. 1962 ஆகஸ்ட் 9ம் தேதியன்று ஹெஸ்ஸே காலமான செய்தியை ரேடியோவில் கேள்விபட்ட திருலோகம் தனது உறவினர்களில் ஒருவர் இறந்து போனது போலப் பதறிப்போயிருக்கிறார்

அதைக்கண்ட மனைவி யாரு இறந்து போனது எனக்கேட்டதற்கு, என் சொந்தம். உனக்கு இதுல தீட்டு இல்லை என்று சொல்லிவிட்டு ஹெஸ்ஸேயிற்க்காக தான் தீட்டு காக்கவில்லை என்றாலும் உடனே ஒரு முழுக்கு போட வேண்டும் எனக் கிணற்றடிக்குப் போய்க் குளித்துத் துக்கம் அனுஷ்டித்திருக்கிறார்.

ஒரு எழுத்தாளர் மீது மொழிபெயர்ப்பாளர் கொண்டிருந்த அன்பிற்கு இதைவிட உயர்வான நிகழ்வு வேறு என்ன இருக்கமுடியும்.

இந்தத் தலைமுறையை சேர்ந்த பெரும்பான்மையான வாசகர்களுக்கும் இலக்கியவாதிகளுக்கும் திருலோக சீதாராம் யார் என்றே தெரியாது. அறிந்து கொள்ளும் முனைப்பும் குறைவு.



ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் இலக்கியப்பரப்பில் திருலோக சீதாராம் மிக முக்கிய ஆளுமை. கவிஞர். சிவாஜி பத்திரிக்கையின் ஆசிரியர். பாரதி பாடல்களை ஊர் ஊராகப்பாடிய பாடகர். மொழிபெயர்ப்பாளர். சிறந்த மேடைப்பேச்சாளர். தமிழ் அறிஞர், இப்படித் தனது வாழ்க்கையைத் தமிழ் இலக்கியத்தின் மேம்பாட்டிற்காகவே செலவிட்ட அரிய மனிதர்.

திருலோக சீதாராமின் பூர்வீகம் திருவையாறு . ஆனால் பெரம்பலூர் அருகிலுள்ள அருகில் தொண்ட மாந்துறையில் தாய்மாமா வீட்டில் வளர்ந்திருக்கிறார்.

பாரதி மீது கொண்ட பற்றின் காரணமாக அவரது குடும்பத்துடன் நெருங்கிப்பழகியவர் திருலோகம். பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை கதாகாலட்சேபம் செய்வதுபோல இசைத்து மேடையில் பாடியிருக்கிறார்

பாரதியாரின் மனைவி செல்லம்மாவின் இறுதிகாலத்தில், அவரோடு தங்கி பணிவிடைகளை செய்தவர் சீதாராம். செல்லம்மாவின் உயிர் அவரது மடியில் தான் பிரிந்தது



கவிஞரும் ஆவணப்பட இயக்குனருமான நண்பர் ரவி சுப்ரமணியன் திருலோக சீதாராம் பற்றி அற்புதமான ஆவணப்படம் ஒன்றை இயக்கியுள்ளார்.

திருலோகம் என்றொரு ஆளுமை என்ற இப்படம் அவரது வாழ்க்கை மற்றும் எழுத்துலகம் குறித்து விரிவான ஆய்வின் வழியே உருவாக்கபட்டுள்ளது. அரிய கோப்புக்காட்சிகள். புகைப்படங்கள். தகவல்களைத் தேடி வழங்கியிருக்கிறார்.

எழுத்தாளர்களின் புகைப்படங்களோ, கையெழுத்துபிரதிகளோ, புத்தகங்களோ எதுவும் ஆவணப்படுத்தபடாத சூழலில் இவற்றைத் தேடிச்சேகரிப்பது எளிதான வேலையில்லை. ஒன்பது மாதங்கள் இதற்கான ஆய்வினை மேற்கொண்டிருக்கிறார். அந்த உழைப்பின் பலனே சிறப்பான இந்த ஆவணப்படம். `ஆம்பல் கலை இலக்கிய அறக்கட்டளை' இதனை தயாரித்துள்ளது

பாரதிதாசனின் பாடலை ஓவியர் மருது வரைந்த ஓவியங்களைக் கொண்டு அனிமேஷன் செய்திருப்பது சிறந்த முயற்சி

கவித்துவமாக உருவாக்கபட்ட இந்த ஆவணப்படத்தில் திவாகர் சுப்ரமணியத்தின் நேர்த்தியான இசையும் சிபி சரவணனின் அருமையான ஒளிப்பதிவும் இணைந்து நம்மைக் காலத்தின் பின்னோக்கி அழைத்துப் போகின்றன. ரவி சுப்ரமணியன் சிறந்த பாடகர். முறையாக இசைகற்றுக் கொண்டவர். அதன் வெளிப்பாட்டினை இந்த ஆவணப்படத்தில் முழுமையாகக் காணமுடிகிறது.

சீதாராமின் புதல்வர்களில் ஒருவரான சுப்ரமணியன் இந்த ஆவணப்படத்தை தயாரித்திருக்கிறார். அவர் தனது தந்தைக்கு செலுத்திய சிறந்த அஞ்சலி இதுவென்பேன்.

திருலோக சீதாராமின் நண்பரும் சீடருமான தமிழறிஞர் டி. என். ராமச்சந்திரன் அவர்களின் நேர்காணல் இப்படத்தின் தனிச்சிறப்பு. அவர் திருலோக சீதாராமைப்பற்றிப் பேசும்போது நெகிழ்ந்து போய்த் தனது நினைவுகளைக் கண்ணீருடன் பகிர்ந்து தருகிறார்.

திருலோக சீதாராம் தான் நடத்திய சிவாஜி இதழின் ஆண்டு மலருக்குப் பாவேந்தரிடம் ஒரு கவிதை கேட்ட போது சீதாராமை புகழ்ந்து ஒரு கவிதை எழுதி கொடுத்திருக்கிறார்.

அதற்குப் பாவேந்தர் சொன்ன காரணம்

"திருலோகம் உனக்கு என்ன பஞ்சம் தெரியுமா? புகழ் பஞ்சம். உன் அருமை உனக்குத் தெரியலை. அதான் நான் கவிதையா எழுதி, என் கையெழுத்தும் போட்டிருக்கேன். "

திருலோகத்தின் பெருமைகளை, தியாகத்தை இன்றைய தமிழ் இலக்கியத்திற்கு நினைவூட்டும் விதமாக ரவி சுப்ரமணியன் இப்படத்தை சிறப்பாக உருவாக்கியுள்ளார். அவருக்கு மனம் நிரம்பிய பாராட்டுகள்.

இலக்கியவாசகர்கள், ஆய்வாளர்கள் இந்த டிவிடியை வாங்கிப் பார்த்து பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும். கல்லூரிகள். இலக்கிய அமைப்புகள். பள்ளிகளில் இந்த ஆவணப்படத்தைத் திரையிட்டு காட்ட வேண்டியது நமது கடமையாகும்.

பாரதி கிருஷ்ணகுமார் உரை @ கவிஞர் திருலோக சீதாராம் நூற்றாண்டு விழா

https://www.youtube.com/watch?v=ByXK7fFdeVI&t=151s[29:34]

சேக்கிழார் அடிப்பொடி டி.என். ராமச்சந்திரன் உரை @ கவிஞர் திருலோக சீதாராம் நூற்றாண்டு விழா

https://www.youtube.com/watch?v=EgUmnZFJ_eo [27:36]

கவிஞர், சிவாஜி இதழ் ஆசிரியர் மற்றும் பன்முக ஆளுமையான திருலோக சீதாராம் **(1917-1973)** அவர்களின் **நூற்றாண்டு விழா, 2017**-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு மற்றும் சென்னையில் உள்ள ஆம்பல் கலை இலக்கிய அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி

சார்பாக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாப் பேச்சாளர், கவிஞர், மற்றும் 'பொற்காசுப் புலவர்' என்று அழைக்கப்பட்ட அவரது இலக்கியப் பங்களிப்புகள் இந்த விழாக்களில் போற்றப்பட்டன.

திருலோக சீதாராம் நூற்றாண்டு விழா சிறப்பம்சங்கள்:

- **திருவையாறு விழா:** திருவையாறு பாரதி இயக்கம் சார்பில், திருலோக சீதாராமின் நண்பரான சேக்கிழார் அடிப்பொடி தி.ந. ராமச்சந்திரன் தலைமை வகித்து, அவரது இலக்கியப் பங்களிப்புகளைப் போற்றினார்.
- **சென்னை விழா:** ஆம்பல் கலை இலக்கிய அறக்கட்டளை சார்பாக மயிலாப்பூர் பி.எஸ். மேல்நிலைப்பள்ளியில் ஏப்ரல் 1, 2017 சனிக்கிழமை அன்று விழா நடைபெற்றது.
- **சாகித்திய அகாதெமி விழா:** 18 நவம்பர் 2017 அன்று திருச்சி தூய வளனார் கல்லூரியில் சாகித்திய அகாதெமி மற்றும் தமிழ் எழுத்தாளர்கள் இணைந்து நடத்திய கருத்தரங்கில், அவரது இதழியல் மற்றும் இலக்கியப் பணிகள் விவாதிக்கப்பட்டன.
- **பங்கேற்பாளர்கள்:** திருலோக சீதாராமின் குடும்ப உறுப்பினர்கள், இலக்கியவாதிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு அவரது 'சிவாஜி' இதழின் பங்கு மற்றும் கவித்திறனை நினைவு கூர்ந்தனர். [1

திருலோக சீதாராம் பற்றிய முக்கிய குறிப்புகள்:

- **பிறப்பு & இறப்பு:** ஏப்ரல் 1, 1917 – ஆகஸ்ட் 23, 1973.
- **சிறப்பு:** 'சிவாஜி' இதழின் ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர் (சித்தார்த்தன்), கவிஞர், மற்றும் மேடைப்பேச்சாளர்.
- **அன்புப் பாலம்:** கவிஞர் பாரதிதாசன் மற்றும் காமராஜருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.

அவரது நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையை இங்கே பார்க்கலாம்:
இந்த வீடியோவில் கவிஞர் திருலோக சீதாராம் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையை நீங்கள் காணலாம்:

கவிஞர் திருலோக சீதாராம்

நூற்றாண்டு விழா


தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் சிவாஜி இதழ் ஆசிரியரும், கவிஞருமான திருலோக சீதாராமின் நூற்றாண்டு விழா சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் சிவாஜி இதழ் ஆசிரியரும், கவிஞருமான திருலோக சீதாராமின் நூற்றாண்டு விழா சனிக்கிழமை மாலை நடைபெற்றது.
திருவையாறு பாரதி இயக்கம் சார்பில் நடைபெற்ற விழாவுக்கு தஞ்சாவூர் கவிராயர் தலைமை வகித்தார். இதில், திருலோக சீதாராமின்

நண்பரான சேக்கிழார் அடிப்பொடி தி.ந. ராமச்சந்திரன் பேசியது: திருவையாறைச் சேர்ந்த திருலோக சீதாராம் தமிழ், ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். வானொலியிலும், இலக்கியக் கூட்டங்களிலும் நடைபெற்ற கவியரங்க நிகழ்ச்சியில் அவர் எழுதி வைத்துப் படிக்காமல், அந்த நேரத்தில் கவிதை வரிகளை சீரான நீரோட்டம் போலப் பாடுவார். அவரைப் பொற்காசுப் புலவர் எனக் கூறுவர். அவருடைய கவிதைகளின் ஜீவன் இன்றும் தலைசிறந்து விளங்குகிறது என்றார் ராமச்சந்திரன். திருலோக சீதாராமின் இரு மகன்களும், மகளும் பங்கேற்றனர். மேலும், இரா. சுப்பராயலு, பாரதி இயக்கத்தின் நா. பிரேமசாயி, அறங்காவலர் இரா. மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.











திருலோக சீதாராம் (1917–1973) தமிழ்நாட்டின் மிகச்சிறந்த கவிஞர், பத்திரிகையாளர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் மேடைப் பேச்சாளர் ஆவார். பாரதியாரின் தீவிர பக்தரான இவர், 'சிவாஜி' என்ற இலக்கிய இதழை நடத்தித் தமிழுக்குச் சிறந்த சேவை புரிந்தார். பன்முகத் திறமை கொண்ட இவர், கவிதை, கட்டுரை மற்றும் மொழிபெயர்ப்புத் துறைகளில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தார்.

பிறப்பு மற்றும் தொடக்கக் காலம்

- **இயற்பெயர்:** திருவையாறு லோகநாதய்யர் சீதாராமன் (திருலோக சீதாராம்).
- **பிறப்பு:** ஏப்ரல் 1, 1917, பெரம்பலூர் அருகே உள்ள தொண்டமாந்துறையில் பிறந்தார்.
- **பெற்றோர்:** லோகநாத ஐயர் - மீனாட்சி சுந்தரம்மாள் (தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்).
- **கல்வி:** எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்தார்.

பணிகள் மற்றும் இலக்கியப் பங்களிப்பு

- **புரோகிதர் பணி:** தொடக்கத்தில் புரோகிதராகச் சிறிது காலம் பணிபுரிந்தாலும், அதில் ஈடுபாடு இல்லாததால் இலக்கியத் துறைக்கு வந்தார்.
- **சிவாஜி இதழ்:** 1939-ல் 'சிவாஜி' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று, 1968 வரை வார இதழாகவும், 1969 முதல் மாத இதழாகவும் தனது மறைவு வரை சிறப்பாக நடத்தினார்.
- **பாரதி பற்று:** பாரதியாரின் கவிதைகள் மீது அதீத பற்று கொண்டவர், பாரதியின் பாஞ்சாலி சபதத்தை மேடைகளில் பரப்பினார்.
- **படைப்புகள்:** கவிதைகள், இலக்கியக் கட்டுரைகள் மற்றும் பிறமொழி நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்தார்.

மறைவு

தமிழ் இலக்கிய உலகுக்குச் சிறந்த பங்களிப்புகளை வழங்கிய திருலோக சீதாராம், ஆகஸ்ட் 23, 1973 அன்று காலமானார்.

சிறப்பம்சங்கள்

- "சௌந்தர்ய ஒலி" உலகில் வாழ்ந்த கவிஞர்.
- தமிழ் இலக்கியக் கட்டுரைகள் மற்றும் கவிதைகள் மூலம் தனித்துவம் பெற்றவர்.

https://www.tamilonline.com/thendral/article.aspx?aid=9106

திருச்சி - ஊறும் வரலாறு : சொல் புதிது -

கவிஞர் திருலோக சீதாராம்!

https://www.vikatan.com/literature/arts/trichy-history-the-life-story-and-achievements-of-writer-triloka-sitaram



தலைக் காவிரியிலிருந்து பூம்புகார் வரை காவிரிக்கரை ஓரமாகவே பயணப்பட்டு, காவிரி வளர்த்த பண்பாட்டை வாழ்க்கையை தி.ஜானகிராமன் சிட்டியோடு இணைந்து எழுதிய பயண இலக்கியம் 'நடந்தாய் வாழி காவேரி.' திருச்சியைக் கடக்கும்போது அவர்கள் சந்திக்க விரும்பிய கவி ஆளுமை திருலோக சீதாராம். ரசனையில் தோய்ந்த தி.ஜா சொல்கிறார், "சீதாராமனைக் காண்பது என்றால் கவிதை கேட்பது என்பதுதான் பொருள். அவருடைய 'கந்தருவகானம்' காவியத்திலிருந்து சில பகுதிகளைப் பாடிக் கேட்டபோது அவரையும் பயணத்தில் கூட அழைத்துப் போகலாமே என்று தோன்றியது. அப்படிச் செய்தால் அவரது கவிதைப் பொழிவில் மயங்கி, காவேரிக் காட்சிகளை சரியாக கவனிக்காமல் விட்டுவிடுவோமோ என்ற கவலையால் அந்த யோசனையைக் கைவிட்டோம்" என்பது தி.ஜாவின் வாக்குமூலம். அதே தி.ஜா, திருலோகத்தை 'குள்ளமான ஆகிருதியில் இருந்தாலும் தெய்வாம்சத்தால் அகத்தோற்றத்தின் உன்னதத்தால் புறமும் நெடிதாகத் தோன்றும் ஒரு அதிமானுடன்' என்று ஒரு கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

கவிதையை எழுத்தின் வரிகளாகப் பார்க்காமல், ஒலியின் ஒழுங்காக இசையின் இணையாக ஆராதித்தவர் திருலோகம். கவிதை, பாடல், சிறுபத்திரிகை, இசைஉரை, இலக்கியப்பொழிவு, தத்துவம், மொழிபெயர்ப்பு, கவித்திரட்டு, காவிய நாடகம் என்று தொட்டதிலெல்லாம் சுடர்விட்டவர் அவர். பாரதியில் மூழ்கி பரவசமாகி ஞானத் தந்தையாய் பாரதியை ஏற்றவர். அதிலும் பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' அவருக்கு உயிர். பாஞ்சாலி சபதத்தின் எல்லாப் பாத்திரங்களாகவும் அவரே மாறி, குரலால் நடித்து இசையால் துளைத்தபோது கேட்டவர்கள் மயங்கிக் கிடந்ததாக சேக்கிழார் அடிப்பொடி தி.ந.ராமச்சந்திரன் (இலக்கிய உலகம் TNR என்றது) கூறுகிறார். மூன்று மணிநேர பாஞ்சாலி சபதத்தை அவர் "நாமும் கதையை முடித்தோம் - இந்த நானிலம் முற்றும் இன்பத்தில் வாழ்க"

என்ற பாரதி வரிகளோடு முடிக்கும்போது சபை கைதட்ட மறந்து ஸ்தம்பித்து நிற்குமாம். காலைத் தொட்டு வணங்குமாம். இந்த அனுபவத்திற்காக பொற்காசு தருவார்களாம். பொற்காசுப் புலவர் எனப் புகழப்பட்டாராம் திருலோகம்.

பாரதியின் குடும்பத்தின் மீதும் பாசத்தைக் கொட்டினார் திருலோகம். 1955-ல் பாரதியின் மனைவி செல்லம்மாவின் உடல்நலம் மோசமானபோது தன் குடும்பத்தைப்பற்றிக் கவலைப்படாமல் ஏறக்குறைய மூன்று மாதங்கள் அவருடனேயே தங்கி செல்லம்மாவை கவனித்துக்கொண்டது திருலோக சீதாராம்தான். செல்லம்மா பாரதியின் உயிர் பிரிந்தது திருலோக சீதாராம் மடியில்தான் என்று திருலோகத்தின் மகன் சுப்பிரமணியன் சீதாராம் சொல்லி நெகிழ்கிறார்.

பெரம்பலூருக்கு அருகிலுள்ள தொண்டைமான்துறை என்ற ஊரில் பிறந்தவர் சீதாராம். தந்தை திருவையாறு லோகநாத ஐயர். தாய் மீனாட்சி சுந்தரம்மாள். பிற்காலத்தில் பூர்வீக ஊரையும் அப்பாவின் பெயரையும் சேர்த்து 'திருலோக சீதாராம்' ஆனார். 1917ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ல் பிறந்தார். தாய் மொழி தெலுங்கு. தங்கை லலிதாவும் தம்பி பஞ்சாபகேசனும் கூடப்பிறந்தவர்கள். அப்பாவை 3 வயதிலேயே இழந்து தாய்மாமா வீட்டில் வளர்ந்தார். தனது 19 வயதில் 1936-ல் 10 வயதேயான ராஜாமணியை மணந்தார். இவர்களுக்கு மதுரம், வசந்தா, இந்திரா என்ற மூன்று பெண்களும், பசுபதி, சுப்பிரமணியன், முரளிதரன், ராமகிருஷ்ணன் என்ற நான்கு மகன்களும் பிறந்தனர்.

பள்ளிப்படிப்பு 8-ம் வகுப்போடு சீதாராமுக்கு நின்றுவிட்டது. 14 வயதில் கோயில் புரோகிதர் ஆனார். அந்த ஊரிலேயே வாழ்ந்த அந்தககவி ராமசாமி படையாச்சியிடம் முறையாகத் தமிழ் கற்றார். பார்வை இழந்த படையாச்சி ராமாயணம் பாரதக் கதைகளை பிரசங்கம் செய்வதில் வல்லவர். அவரின் கதைகளில் வரும் பாடல்களை சீதாராமே பாடுவார். ஒருமுறை படித்தாலே எதுவும் அவருக்கு மனதில் தேங்கும். பாடல் எடுத்துப் பாடும் மனம் வாய்த்தது இப்படித்தான்.

சின்ன வயதிலேயே கவிதையிலும் பத்திரிகையிலும் சீதாராமுக்கு ஆர்வம் இருந்தது 18 வயதிலேயே விழுப்புரத்தில் 'இந்திய வாலிபன்', 'பால பாரதம்' போன்ற பத்திரிகைகளைத் தொடங்கினார். பிறகு விழுப்புரத்திற்கு அருகில் பரிக்கல் என்ற ஊரிலிருந்து வந்த 'தியாகி' பத்திரிகையின் துணை ஆசிரியரானார். அதில் மந்தஹாசன் என்ற புனைபெயரில் எழுதினார். சில மாதங்களிலேயே நிலைக்கப்போகும் பெயரான 'திருலோக சீதாராம்'க்கு மாறினார்.

திருச்சி வானொலிக்கும் திருலோகத்துக்கும் இருந்த பிணைப்பு முக்கியமானது. பாரதிதாசனைச் சந்தித்து அவரோடு கவிதை பாடியது இங்குதான். “உன்னிடம் கவிதை இல்லை என்றால் நீ எங்குமே கவிதையைக் காணவியலாது” என்ற சாகா வரிகளைச் சொன்ன திருலோக சீதாராமின் 'கந்தருவகானம்' இசைக்கப்பட்டதும் இங்குதான். அதுவும் ஒரே இரவில் அவர் நடத்திய கவிதை வேள்வி அது. அதை திருலோகத்தின் MAGNUM OPUS என்கிறார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டி.என்.ஆர். இந்தக் கந்தர்வனில் மயங்கியே நாகலிங்கம் என்ற தன் பெயரை 'கந்தர்வன்' ஆகச்சூடினார் முற்போக்கு எழுத்தின் முன்னோடியான எழுத்தாளர் கந்தர்வன்.

பாரதிதாசனை முழுமையாக உள்வாங்க உதவும் பெரும் தொகுப்பு நூலைத் தந்த முருகு சுந்தரம் சொல்கிறார், “பாவேந்தரின் நம்பிக்கைக்குரிய பிராமண நண்பர்கள் இருவர். ஒருவர் ஓவியர் வேணுகோபால் சர்மா (திருவள்ளுவருக்கு உருவம் கொடுத்தவர்) மற்றொருவர் திருலோக சீதாராம்” என்று. இந்த நூலில்தான் தனக்கும் பாவேந்தருக்குமிருந்த நட்பின் ஆழத்தைத் திருலோகம் நமக்குப் புரியவைக்கிறார். பாரதியின் பாஞ்சாலி சபதத்தைப் பாடிப்பாடி நடித்து உருகவைத்த அதே முறையில் பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு' காவியத்தை திருலோகம் பாடிக்கேட்டவர்கள் பாக்கியவான்களாம். பாரதி கேட்கமுடியாத திருலோகத்தின் இசைப்பொழிவை அவரின் சீடர் பாவேந்தர் கேட்டு “சபாஷ் பாண்டியா” என்று குதூகலித்துள்ளார்.

“முற்றத்தில் சிங்கம் படுத்திருப்பதுபோல் சாய்ந்துகிடந்தார் பாவேந்தர். ரிஷைன் பண்ணிட்டியல்ல அப்ப வச்சுட்டு போ என்றார். மொத்த தாள்களையும் வைத்துவிட்டுக் கிளம்பினேன். முட்டாளு உன்னைப் போகச் சொல்வேனா. இந்த விஷயத்திலிருந்து போ என்றேன். உள்ளேபோன என்னை சாய்வு நாற்காலியின் கைப்பிடியில் உட்கார்த்திவைத்து, என்னை முதலில் தெரியுமா, கி.ஆ.பெ.வி-யை முதலில் தெரியுமா என்றார். உங்களுக்கும் முன்னால் உங்கள் கவிதைகளைத் தெரியும் என்றேன். உங்களைவிட உங்கள் கவிதைகளே எனக்கு அதிகம் மதிப்புடையவை என்றேன். துள்ளி எழுந்த பாவேந்தர், இவண்டா தமிழன். நீ வேண்டியதில்லை உன் கவிதை எனக்குப்போதும் என்றானே இவன் மறத்தமிழன் என்று சொல்லி பக்கத்தில் அமர்த்திக்கொண்டார். சாப்பிட வைத்தார்.

சிவாஜி 17-ம் ஆண்டு மலருக்குக் கவிதை கேட்டேன். கொஞ்சம் தூங்கு தருகிறேன் என்றார். உதட்டில் சூடுபட்டு விழித்தேன். வாயருகே காப்பியை வைத்து, கழுதை! என்ன இப்படி ஒரேயடியா தூங்குற, இந்தா கவிதை என்றார். என்னைப் பாராட்டி எழுதியிருந்தார்.

சிவாஜிக்குத்தானே கேட்டேன். என்னைப் பற்றி எழுதியிருக்கீங்களே என்றேன். முட்டாளு உனக்கு என்ன பஞ்சம் தெரியுமா? பணப் பஞ்சமில்லே. புகழ்ப் பஞ்சம். உன் பெருமை ஒரு பயலுக்கும் தெரியாது. நான்தான் சொல்லணும். சும்மா போடு என்றார்."

அழுக்கற்ற அவரின் வாழ்க்கை நெறிதான் காமராஜரையும் அண்ணாவையும் ஒரே நேரத்தில் அவரை நேசிக்க வைத்தது. மனுதர்ம சாஸ்திரத்தைத் தமிழில் மொழிபெயர்த்த அவர்தான் பெரியாரை அவர் நடத்திய எழுத்தாளர் சங்க மாநாட்டில் பேச அழைத்துள்ளார். அவர் அச்சகமும் வீடும் பல எழுத்தாளர்களின் பர்ணசாலையாக இருந்தன. வல்லிக்கண்ணன், ந.பிச்சமூர்த்தி கரிச்சான்குஞ்சு, கு.ப.ரா, தி.ஜா, கி.வா.ஜ, எம்.வி.வெங்கட்ராம், அகிலன், ஜெயகாந்தன், கொத்தமங்கலம் சுப்பு, நா.பார்த்தசாரதி, இந்திரா பார்த்தசாரதி, சுகி.சுப்பிரமணியம், வாலி என்ற அந்தப் பட்டியல் நீளும்.

1952 தேர்தலில் சுயேச்சையாக ஸ்ரீரங்கத்திலும் துறையூரிலும் திருலோகம் போட்டியிட்டார். இரண்டு ஜீப், மைக் எல்லாம் ஜி.டி.நாயுடு கொடுத்தார். செலவை என்.எஸ்.கிருஷ்ணன் பார்த்துக்கொண்டார். பாரதி பாடல்களை ஓங்கிப் பாடி உணர்ச்சியோடு பேசுவார் திருலோகம். அதுதான் பிரசாரம். பின்னால் வருகிற அவரின் நண்பர் அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் ஓட்டு கேட்பார். யாரையும் திட்டாத, வாக்குறுதி தராத ஒரு வேட்பாளரைச் சந்தித்த புது அனுபவம் திருச்சிக்கு.

ஜி.டி.நாயுடுவைச் சந்தித்து நண்பரானதே தனிக்கதை. நாயுடுவின் வீட்டைக் கடந்தபோது பார்க்க ஆசைப்பட்ட இவரிடம் ஒரு படிவத்தைக் கொடுத்துப் பூர்த்தி செய்யுங்கள். காரணம் சரியாக இருந்தால் மட்டுமே ஐயா பார்ப்பார் என்றார்கள். இவர் பார்க்கும் நோக்கம் என்ற இடத்தில் "சும்மா" என்று எழுதினார். நாயுடு திருலோகத்தை உடனே அழைத்தார். இப்படித் தொடங்கிய நட்பு அது. நல்லவர்கள் நட்பு என்பதால் வளர்ந்தது. "உழைப்பின் உயர்வு", "அதிசய மனிதர் ஜி.டி.நாயுடு" என்று இரண்டு புத்தகங்கள் எழுதினார் திருலோகம். உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் என்றார் அந்த விந்தை மனிதர். எங்கள் திருச்சி சீத்தாலட்சுமி பள்ளிப் பெண்களுக்கு ஒரு பேருந்து கொடுங்கள் என்றார் திருலோக சீதாராம். மேதை தந்த பேருந்தை கவிதை வாங்கி வந்த அதிசயத்தைப் பள்ளி பார்த்தது. ஊரார்

பிள்ளைகளை பஸ்ஸில் அனுப்பியதால் அவர் பிள்ளைகள் இன்று காரில் போகிறார்கள்.

திருலோக சீதாராம் என்ற பெயரோடு இணைந்தே வருவது அவர் நடத்திய 'சிவாஜி' பத்திரிகை. 40 ஆண்டுகள் நடந்த சிறுபத்திரிகை அது. அதை சிவஞானம்பிள்ளை 1935-ல் தொடங்கினார். அப்போது திருலோகம் துறையூரிலிருந்து வந்த 'கிராம ஊழியன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். 25 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த திருலோகத்துக்கு 75 ரூபாய் தந்து 'சிவாஜி'க்கு ஆசிரியர் ஆக்கி திருச்சிக்கு வரவைத்தார் பிள்ளை. 1939-ல் சிவாஜி உரிமையை திருலோக சீதாராமிடமே கொடுத்தார் அவர். அதுநாள் தொடங்கி 1968 வரை வார இதழாகவும் 1969 முதல் திருலோகம் மறைந்த 1973 வரை மாத இதழாகவும் சிவாஜி வந்தது. அதன்பிறகும் அவர் நண்பர் டி.என்.ஆர் ஆசிரியராக இருந்து 1980 வரை சிவாஜி வந்துள்ளது. பெரிய பொருளாதாரப் பின்னணி இல்லாமல் உயர்ந்த லட்சியங்களைச் சுமந்து வாழ்க்கையோடு மல்லுக்கட்டியவர் திருலோகம். அதனால்தான் "சருகுகளைச் சேகரிப்பதிலேயே என் காலம் கழிந்துவிட்டது. அவற்றின் அக்னிஜ்வாலையில் குளிர்காய முடியாமல் போனது" என்று வாழ்நாளெல்லாம் பொருளுக்காக அலைந்ததைக்கூடக் கவிதையாக்கினார் அந்த அதிமானுடன்.

திருலோக சீதாராம் நமக்குத் தந்த இலக்கியக் கொடைகள் காலத்தை வென்று நம்மோடு பேசுகின்றன. 1967-ல் வந்த 'கந்தருவ கானம்' ; 1957-ல் அவர் மொழிபெயர்த்த 'சித்தார்த்தன்'; 1961-62, 1971-72 ஆண்டுகளில் அவர் எழுதி சிவாஜியில் வந்த கட்டுரைகளின் தொகுப்பான 'இலக்கியப்படகு'; கவிதைத் தொகுதி 'உதயம்'; அவர் தொகுத்த மற்றவர் கவிதைகள் அடங்கிய 'புதுத்தமிழ் கவிமலர்கள்' ; பாரதி பற்றி ஆனந்த விகடனில் எழுதிய தொடரான 'புதுயுகக் கவிஞர்' ; மொழிபெயர்த்த 'தெலுங்கு ஓரங்க நாடகங்கள்' ; மொழிபெயர்ப்பில் வந்த 'மனுதர்ம சாஸ்திரம்' ; 1952-ல் வந்த 'உழைப்பின் உயர்வு', 'அதிசய மனிதர் ஜி.டி.நாயுடு' இவற்றோடு டி.என்.ஆர் உருவாக்கிய THE POETICAL WORKS OF TIRULOKA SITARAM WITH TRANSLATION AND NOTES. சாகித்ய அகாதெமி கொண்டுவந்துள்ள இராஜாமணி எழுதிய திருலோக சீதாராம். இப்படிப் பல பொக்கிஷங்களைத் தந்தவர் திருலோக சீதாராம்.

“தனியொரு நானும் ததும்பும் படகுமாக” புறப்படுகிற திருலோகத்தின் ‘இலக்கியப்படகு’ நம்மையும் ஏற்றிக்கொள்கிறது. ஏறியபிறகுதான் புரிகிறது, “வாழ்வென்னும் பெருங்கடல் நீந்த வாய்த்த சிறு படகுதான் இலக்கியம்” என்ற அவரின் சொல் எத்தனை சத்தியம் என்பது. 50 கட்டுரைகள். எல்லாமே அளவில் மூன்று பக்கம்தான். அத்தனையும் தேன் சொட்டு. ஆகவே தித்திப்புக்கு என்ன குறைச்சல். கேமராவைக் கண்டதும் விறைப்பதும் முறைப்பதும் பலருக்குள்ள பழக்கம். அதுபோல் பலருக்கு பேனா எடுத்தவுடன் வேண்டாத விறைப்பு எழுத்துக்குள்ளும் வந்துவிடும். ஆனால் தன்னியல்பு கெடாத சொல்லில் தன்னைக் கரைத்துக்கொள்ளும் எழுத்தாளராக திருலோகத்தை நீதியரசர் எஸ்.மகராஜன் அடையாளம் கண்டு தீர்ப்பளிப்பது நியாயமே.

உதாரணமாக, கைத்துப்பாக்கியைத் துடைத்தபோது தற்செயலாய் குண்டு பாய்ந்து இறந்துபோன ஹெமிங்வேக்கு அஞ்சலி போல் அவரின் நோபல் பரிசு பெற்ற ’கடலும் கிழவனும்’ நாவலை முன்வைத்து ஒரு கட்டுரை இதில் உள்ளது. படித்துவிடுங்கள் எனச் சொல்லி நகர்வதுதான் நேர்மை. வயோதிக செம்படவனுக்கும் ராட்சத மீனுக்கும் போராட்டம் 3 நாள்கள் கடலில். கடைசியில் கிழவன் மீனைக் கரையில் இழுத்துப்போடுகிறான். வெறும் கூடுதான் மிச்சம். லட்சியம் நிறைவடைந்த மனநிறைவோடு சிங்கக் கனவுகளோடு கிழவன் தூங்குகிறான். இந்தக்கதை நம்மில் பலர் படித்ததுதான். ஆனால் இதை வைத்து திருலோகம் முன்வைக்கும் வாழ்க்கைப் பார்வை அபாரமானது. ”எந்த சாதனையும் உலகில் அழியக் கூடியதுதான். இந்த அழிவை அறிந்திருந்தும் ஆக்க சக்தியில் மனிதன் வைத்திருக்கும நம்பிக்கைதான் விந்தை. அந்த விந்தையை விமர்சிப்பதுதான் கலையின் வேலை” என்கிறார். “காதலோ பெண்ணோ இல்லாமல் ஒரு நெடுங்கதை இலக்கிய விந்தையாக அமைந்திருக்கிறது. எப்பொருளையும் கருவியாகவைத்து படைப்பின் விந்தைகளை விமர்சித்துவிடலாம் என்பதற்கு ஹெமிங்வே வழிகாட்டி” என்கிறார் திருலோகம்.

’கந்தருவ கானம்’ அவரின் சிறந்த நீள் கவிதைகளின் தொகுப்பு. காவிய நாடக வடிவம் கொண்டவை. “கவிதை அனுபவம்” என்பதன் உண்மைப் பொருளை உணர்த்தி நிற்பவை. “முன்பொரு பாடல் எழுதினேன்- அந்த மூலப் பிரதி கைவசமில்லை” என்ற கவிதை இதில்தான் உள்ளது. அந்தப் பாடல் இப்படி முடிகிறது.


ஹெர்மன் ஹெஸ்ஸே ஜெர்மன் மொழியில் எழுதி நோபல் பரிசும் பெற்ற 'சித்தார்த்தன்' நாவலை ஆங்கிலம் வழியாய் தமிழ்க்கரை சேர்த்த ஓடக்காரர் திருலோக சீதாராம். கவிதை தூவிய மொழியாக்கமல்ல இது. கவிதை கலந்த கவித்துவ ஆக்கமிது. எது ஞானம் அதைப் பெறுவது எப்படி என்ற தேடலே சித்தார்த்தன் நாவல். புத்தரின் போதனைகளைக் கடந்து அவரின் தரிசனத்தை அனுபவத்தைத் தானும் அடையவிரும்புகிறான் சித்தார்த்தன். ஓடும் நதியிலிருந்தே தோணிக்காரன் வாசுதேவன் மூலம் ஞானம் அடைகிறான் சித்தார்த்தன். காலம் என்பது ஒன்று கிடையாது என்னும் ரகசியத்தை நதியே அவனுக்குக் கற்பிக்கிறது. ஆறுக்கு நிகழ்காலம் மட்டுமே உண்டு என்னும் பேருண்மையை வாசுதேவன் மூலம் சித்தார்த்தன் அறிகிறான். "கேட்பது எப்படி" என்பதை நாவல் சொல்கிறது. "சலனமற்ற உள்ளத்தோடு, ஆசையில்லாது, அபிப்பிராயம் எதுவும் கொண்டுவிடாமல் கேட்பது எப்படி என்பதைக்கூட நதியிடமிருந்தே சித்தார்த்தன் கற்றுக்கொள்கிறான்." வாழும் நாவலாக இது இருப்பதால்தான் 1922-ல் எழுதப்பட்டிருந்தாலும் 1957-ல் மொழிபெயர்த்த திருலோக சீதாராம் சொல்கிறார் "நான் என் சொந்த வாழ்வில் சித்தார்த்தனாகவே மாறிவிட வேண்டுமென்று பெரிதும் விரும்பினேன்" என்று. நாமும் அதனாலேயே இன்றும் படிக்கிறோம். வாழ்க்கையின் தத்துவ சரட்டை 150 பக்கங்களில் சொல்லும் மகத்தான படைப்பிது. மகத்துவத்தைத் தீர்மானிப்பது பக்கங்களின எண்ணிக்கை அல்ல என்பதைப் புரியவைக்கிறது.


"மலிந்த விலையில் உயர்ந்த நூல்" என்ற நோக்கத்தோடு தென்னிந்திய மொழிகளுக்காக உருவாக்கப்பட்ட 'தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்' 1957-ல் வெளியிட்ட முதல் தமிழ் நூல் 'புதுத்தமிழ் கவிமலர்கள்.' பாரதிக்குப் பிறகு எழுதிய சிறந்த 55 கவிஞர்களின் மரபுக் கவிதைகளை திருலோகம் இதில் தொகுத்துள்ளார். ஒவ்வொரு கவிஞரைப் பற்றிய சிறு குறிப்பும் எழுதியுள்ளார். புதுமைப்பித்தனின் அசல் கவிதையும் இதில் உள்ளது. கவிதை கடந்துவந்த பாதையைத் தெரிந்துகொள்ள விரும்பும் எவருக்கும் இந்தப் புத்தகம் ஒரு கைவிளக்கு.

ஆனந்த விகடன் இதழில் 1955-56ல் "மந்திரம் போல் சொல் வேண்டுமடா" என்ற பாரதியின் படைப்புகளை முன்வைத்து 'புதுயுகக் கவிஞர்' என்ற தொடரை திருலோகம் எழுதியுள்ளார். 23 வாரங்கள் இது வந்துள்ளது. "இலக்கிய உலகில் பாரதியின் ஸ்தானத்தை எடைபோடும் விமர்சன வேலை இல்லையிது" என்னும் கவிஞர், சொல் அழகும்

கற்பனையழகும் கொண்டு பாரதியைப் புதுயுகக் கவிஞராக இத்தொடரில் அறிமுகம் செய்கிறார்.


'தேவசபை' திருலோகசீதாராமின் அறிவுக் குழந்தை. உபநிஷத்துகளும் தம்மபதமும் அங்கு அவரால் பிழியப்பட்டன. சாறு, அடுத்த இதழ் சிவாஜியில் பிதாமகர் கடிதமாக வந்தது. "நான் நேற்றே இறந்துபோய்விட்டேன் என்று உணர்ந்தால் மிச்ச வாழ்க்கையைப் பிறருக்காய் வாழலாம்'' என்ற அவரின் சிந்தனை அங்குதான் வெளிப்பட்டது.














விலை
ரூ. 1
புதுத்தமிழ்க் கவிமலர்கள்
திருலோக சீதாராம்
தொகுப்பாசிரியர்
ஹிமாலயா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு


இந்திய இலக்கியச் சிற்பிகள்
திருலோக சீதாராம்
இராஜாமணி


கந்தருவ கானம்
திருலோகசீதாராம்



திருலோக சீதாராம் எனும் பன்முக ஆளுமை

https://www.hindutamil.in/news/opinion/columns/205073-.html

தமிழ்க் கவிதை உலகின் ஒரு அபூர்வ கவி ஆளுமை திருலோக சீதாராம். சௌந்தர்ய ஒலி உலகில் வாழ்ந்து பாடித் திளைத்தவர். அந்த இசை தந்த நுண்ணுணர்வின் வழியாகவே அவர் இலக்கியத்தை, மனிதர்களைப் பார்த்தார். அந்தப் பார்வை தமிழுக்கும் சில புதிய வண்ணங்களைச் சேர்த்தது.

ஒரு கவிஞராக, சிறு பத்திரிகையாளராக, இலக்கியக் கட்டுரையாளராக, தேர்ந்த மொழிபெயர்ப்பாளராக, மேடைதோறும் பாடி உரை நிகழ்த்தும் பேச்சாளராக, பாரதி, பாரதிதாசன் கவிதைகளைப் பாடிப் பரப்பிய குயிலாகப் பறந்து திரிந்தவர் திருலோக சீதாராம்.

இந்திய தேசியக் கவியும் தமிழ்க் கவிதையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவரும் படைப்பிலக்கியத்தில் பல சோதனை முயற்சிகளைச் செய்தவருமான பாரதியை இன்று நாம் கொண்டாடி மகிழ்கிறோம். ஆனால், அவர் வாழ்ந்த காலத்தில் அவரை முழுமையாக அறிந்திருந்தவர்கள் வெகு சிலரே. அவர்களுள் முக்கியமானவர்கள் வ.ரா, பாரதிதாசன், ஜீவா, திருலோக சீதாராம். எழுத்தோடும் பேச்சோடும் மட்டும் நில்லாமல், தன் வளமான குரலால் பாரதி பாடல்களைப் பாடி மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தவர் திருலோகம்.

மனத்தடை இல்லா நட்பு

பாரதியார் குடும்பத்தாரோடு திருலோகம் எவ்வளவு நெகிழ்ந்த அன்பும் உற்ற உறவும் கொண்டிருந்தாரோ, அது போலவேயான அன்பையும் நட்பையும் பாரதியின் சீடரான பாரதிதாசனோடும் கொண்டிருந்தார். சுயமரியாதை இயக்கக் கவிஞராக இருந்துகொண்டு, ஒரு பிராமணரான பாரதிக்குத் தாசன் என்று அழைத்துக்கொள்வதைத் திராவிட இயக்கப் பிரமுகர்கள் சிலர் ஆட்சேபித்தபோது, பாரதியை யாரும் இனத்தின் பெயரால் இழிவுபடுத்துவதை நான் ஒருபோதும் ஒப்பமாட்டேன் என்று கோபத்துடன் எதிர்த்துள்ளார் பாரதிதாசன். பிராமண எதிர்ப்பில் தீவிரமாக இருந்த அவருக்கு திருலோகத்திடம் நட்பு கொள்வதிலும் எந்த மனத்தடையும் இருந்திருக்கவில்லை.

காங்கிரஸ் தலைவரும், அன்றைய தமிழக முதலமைச்சருமான காமராஜரோடு திருலோக சீதாராம் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். 1961 ஜூலை 29, சனிக்கிழமை திருச்சி டவுன் ஹாலில் நடைபெற்ற 'சிவாஜி' வாரப் பத்திரிகை இதழின் வெள்ளி விழா மலரை வெளியிட்டு உரையாற்றியிருக்கிறார் காமராஜர். திருலோகம் கவிதைகளின் மீதும் சிவாஜி இலக்கிய இதழ் மீதும் கொண்டிருந்த பெரும் மதிப்பால், அவரை அரசவைக் கவிஞராக நியமிக்க எண்ணி, அதைச் சிலரிடம் வெளிப்படுத்தியும் உள்ளார்

காமராஜர். ஆனால், பிற்பாடு அது சில அரசியல் காரணங்களால் நடக்க இயலாமல் போனது.

அதிசயப் பிறவி

1940-களின் இறுதியில், பாவேந்தருக்குப் பொற்கிழி அளிப்பதாக ஒரு திட்டத்தை அப்போதைய திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான அண்ணா அறிவித்தார். அது தொடர்பான சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பங்கேற்று பாரதிதாசனின் கவிதை நயங்களைப் பற்றிப் பேசிய திருலோகத்தைப் பார்த்து, 'அக்ரஹாரத்து அதிசயப் பிறவிகளில் இவரும் ஒருவர்' என்றார் அண்ணா. பாராட்டியதோடு மட்டுமல்லாமல் 'திராவிட நாடு' பத்திரிகை வெளியிட்ட பாவேந்தர் சிறப்பு மலரில் பாவேந்தரைப் பற்றி ஒரு பாடல் எழுதுமாறு கேட்டு வாங்கிப் பிரசுரித்துள்ளார்.

அந்தக் காலகட்டம் மொழியின் மறுமலர்ச்சிக்கான காலகட்டம். சம்பிரதாயங்களைக் கடந்து மொழியை, கலாச்சாரத்தை வேறு தளங்களில் முன் நிறுத்திய ஒரு காலகட்டம். தான் தேசிய இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் திராவிட இயக்கத்தால் மொழிக்குக் கிடைத்த வளத்தை, பயன்பாட்டை மறுக்காமல் சந்தோஷமாக வரவேற்கிறார் திருலோகம்.

இளம் கவி திருலோகம்

பெரம்பலூருக்கு அருகிலுள்ள தொண்டைமான்துறை என்ற ஊரில் திருவையாறு லோகநாத ஐயருக்கும் மீனாட்சி சுந்தரம்மாளுக்கும் 1917 ஏப்ரல் முதல் தேதியன்று பிறந்தவர் திருலோக சீதாராம். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர். மூன்று வயதிருக்கும்போதே தந்தையை இழந்து, மாமன் வீட்டில் தாயின் அரவணைப்பில் வளர்ந்தவர். இவருக்கு லலிதா என்ற தங்கையும் பஞ்சாபகேசன் என்ற தம்பியும் இருந்தனர். 1936-ல் தனது 19-ம் வயதில் 10 வயதான ராஜாமணியைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு மதுரம், வஸந்தா, இந்திரா என்ற மூன்று பெண் குழந்தைகளும் பசுபதி, சுப்பிரமணியன், முரளிதரன், ராமகிருஷ்ணன் என்ற நான்கு ஆண் குழந்தைகளும் பிறந்தனர். திருலோக சீதாராம் மறைவுக்குப் பின், முப்பத்துநான்கு ஆண்டுகள் வாழ்ந்த திருலோகத்தின் மனைவி ராஜாமணி அம்மாள் 2007-ல் தன்னுடைய 81-வது வயதில் மறைந்தார்.

இளம் வயதிலேயே திருலோகத்துக்குக் கவிதை எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டதோடு அல்லாமல், பத்திரிகைத் துறையிலும் ஆர்வம் ஏற்பட்டது.

அதனால், அவரது 18-வது வயதிலேயே ‘இந்திய வாலிபன்’ என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். பிறகு, விழுப்புரத்துக்கு அருகில் பரிக்கல் என்ற சிற்றூரில் ▪ ராம சடகோபன் என்பவர் நடத்தி வந்த ‘தியாகி’ பத்திரிகையின் துணை ஆசிரியராகச் சில மாதங்கள் பணிபுரிந்தார். மந்தஹாசன் என்ற புனைபெயரில் எழுதத் துவங்கிய திருலோகம், சில ஆண்டுகளுக்குப் பிறகு திருலோக சீதாராம் என்ற பெயரிலேயே தன் எழுத்தைத் தொடர்ந்தார்.

தமிழால் ஆன வாழ்வு

கோவை விஞ்ஞானி ஜி.டி.நாயுடுவோடும் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார் திருலோகம். ஜி.டி.நாயுடு அழைப்பின்பேரில் கோவைக்குச் சென்று பல தடவை பேசியுள்ளார். ஒரு கணக்குத் தணிக்கையாளன் சோதனை செய்தால்கூட தவறு கண்டுபிடிக்க இயலாத அளவுக்கு நேர்மையாய்க் கணக்கு எழுதுவதில் தேர்ந்தவராக இருந்த திருலோகத்தின் லெளகீகக் கணக்குகள் மட்டும் எப்போதும் சமனாகாமலேயே இருந்தன. தன்னை முன்னிறுத்துவதைவிடவும் தன் முன்னோர்களை, சக படைப்பாளிகளை, இளைஞர்களை முன்னிறுத்தும் தாய்மை மனம் கொண்ட திருலோகத்தின் வாழ்வு தமிழால் ஆனது.

தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலகட்டம் கு.ப.ரா, ந.பிச்சமூர்த்தி, எம்.வி.வி, தி.ஜானகிராமன் போன்றவர்கள் வாழ்ந்த காலகட்டம். அந்தக் காலகட்டத்தில் அவர்களோடு தன்னையும் இணைத்துக்கொண்டு, சிறு பத்திரிகை மூலமாகவும் இசை வழியாகவும் தன் வழியில் இலக்கிய சலனங்களை ஏற்படுத்தியவர் திருலோக சீதாராம்.

சித்த புருஷர் சீதாராம்

தனது பதினெட்டாம் வயது துவங்கி தன் காலம் முடியும் வரையிலும் சிறு பத்திரிகை ஆசிரியராகவே வாழ்ந்த திருலோக சீதாராம், 1973 ஆகஸ்ட் 23 அன்று தனது ஐம்பத்தாறாம் வயதில் மறைந்தார். அவர் மறைவுக்குப் பின் ஜெயகாந்தன் பேசிய இந்த வார்த்தைகள் அர்த்தம் பொதிந்தவை.

“திருலோக சீதாராம் என்பவர் சதா இங்கே திரிந்துகொண்டிருக்கும் சித்த புருஷர்களில் ஒருவர். அவர் நமக்குத் தோற்றம் காட்டியதும் நம்மிடம் துலங்கியதும் ஒரு அருள். அவர் எங்கேயும் போவதில்லை. தோன்றியது யாவும் மறையும் - சூரியன் தோன்றி மறைவதுபோல. ஆனால், தோன்றியது யாவும் மறையும் என்றால் என்ன பொருள்.. மறைந்தது யாவும் தோன்றும் என்பதுதான். எனவே, இந்தப் பொருள் சுழற்சியில் சிக்குண்ட மஹா

பாக்யவான்கள் நாம். அவர்களைக் கண்டுகொண்டோம்; அவர்களுடைய சொற்களைக் கேட்டோம்; அவர்களைச் சுமந்தோம். அந்தச் சொற்களையும் கருத்துகளையும் இன்னும் சுமந்துகொண்டு சுவாசித்து வாழ்கிறோம்; வாழ்வோம். இதிலிருந்து நமது சந்ததிகள் சுடரோடு பொலிவர்".

- ரவி சுப்பிரமணியன், எழுத்தாளர், கவிஞர், ஆவணப்பட இயக்குநர்

***திருலோக சீதாராம் நூற்றாண்டு நாள் ஏப்ரல்-1* -திருலோக சீதாராம் (1.4.1917 23.8.1973)**

"இலக்கியப் படகு"- திருலோக சீதாராம்

https://siruvanivasagarmaiyam.blogspot.com/2020/07/2020.html



திருலோக சீதாராம்

(1-4-1917 – 23– 8-1973)

அறிந்த ஆளுமை அறியாத செய்திகள்.

மூலக் கருத்தின் மோனச் சிறையுள் முடமாய்க் கிடந்தேனைக்
கோலச் சுடரில் கோணமெலாம் ஏன் கொண்டு திரியவிட்டாய்?
நீண்ட வழியும் நெடுமூச்சொன்றும் நின்று எரியும் சுடரும்
ஈண்டுனதருளே என்கின்றார் அதற்கு என்னே பொருள் ஐயா?

- திருலோக சீதாராம்

தமிழ் கவிதை உலகின் ஒரு அபூர்வக் கவிஆளுமை திருலோக சீதாராம். சௌந்தர்ய ஒலி உலகில் வாழ்ந்து பாடித் திளைத்தவர். அந்த இசை தந்த நுண்ணுர்வின் வழியாகவே அவர் இலக்கியத்தை, மனிதர்களைப் பார்த்தார். அந்தப் பார்வை தமிழுக்கும் சில புதிய வண்ணங்களைச் சேர்த்தது.

ஒரு கவிஞராக, சிறு பத்திரிகையாளராக, இலக்கியக் கட்டுரையாளராக, தேர்ந்த மொழிபெயர்ப்பாளாராக, மேடைதோறும் பாடி உரை நிகழ்த்தும் பேச்சாளராக, பாரதி, பாரதிதாசன் கவிதைகளைப் பாடிப் பரப்பிய குயிலாகப் பறந்து திரிந்தவர் கவிஞர் திருலோக சீதாராம். அதே சமயம் அவர் ஒரு சம்பிரதாயமான இலக்கிய உரையாளரோ, கவியரங்கக் கவிஞரோ அல்ல. இலக்கியத்தின் ஒருவித நுட்பமான தன்மையைப் பாடல்களின் மூலம் அடையாளம் கண்டு கொண்டவர். அதன் வழியாகவே அவைகளுக்கான விளக்கத்தையும் மதிப்பீடுகளையும் முன் நிறுத்தியவர்.

திருச்சி மாவட்டம் பெரம்பலூருக்கு அருகிலுள்ள தொண்டைமான்துறை என்ற ஊரில் திருவையாறு லோகநாத ஐயருக்கும் மீனாட்சி சுந்தரம்மாளுக்கும் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று பிறந்தவர் சீதாராம் என்கிற கவிஞர் திருலோக சீதாராம். இவர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர். மூன்று வயதிருக்கும்போதே தந்தையை இழந்து, மாமன் வீட்டில் தாயின் அரவணைப்பில் வளர்ந்தவர். இவருக்கு லலிதா என்ற தங்கையும் பஞ்சாபகேசன் என்ற தம்பியும் இருந்தனர்.

1936 ல் தனது 19 ஆம் வயதில் 10 வயதான ராஜாமணியைத் திருமணம் செய்துகொண்டார் திருலோகம். இவர்களுக்கு மதுரம், வஸந்தா, இந்திரா என்ற 3 பெண் குழந்தைகளும் பசுபதி, சுப்பிரமணியன், முரளிதரன், ராமகிருஷ்ணன் என்ற 4 ஆண் குழந்தைகளும் பிறந்தனர். திருலோக சீதாராம் மறைவுக்குப்பின் முப்பத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்த திருலோகத்தின் மனைவி

ராஜாமணி அம்மாள் 2007 ஆம் வருடம் தன்னுடைய 81 வது வயதில் மறைந்தார்.

எட்டாம் வகுப்புவரை மட்டுமே படித்த சீதாராம், தனது 14ம் வயதில் புரோகிதராகத் தன் வாழ்க்கையைத் துவங்கினார். பள்ளிப் படிப்பு சிறு வயதிலேயே நின்றாலும், தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்கும் ஆவல் அவரிடம் இருந்தது. அதனால், தொண்டைமான் துறையில் வசித்து வந்த பெரும்புலவர் அந்தகக்கவி ராமசாமி படையாச்சியிடம் முறையாகத் தமிழ் கற்றார். கண் தெரியாத அவர், கம்பராமாயணம், நல்லாப்பிள்ளை பாரதம் போன்ற தமிழ் இலக்கியங்களைக் கதா பிரசங்கங்கள் செய்பவர். அவர் பிரசங்கத்துக்குச் செல்லும் இடங்களிலெல்லாம் அவருக்காகத் தமிழ்ப் பாடல்களைத் திருலோகமே வாய்விட்டுப் படிப்பார். ஓரிரு முறை எதையும் படித்துவிட்டால் மனதில் பதிய வைத்துக்கொண்டு மீண்டும் அதை எப்போது கேட்டாலும் அட்சரம் பிசகாமல் திரும்பச் சொல்லும் அபாரமான நினைவாற்றல் இளம் வயதிலேயே திருலோகத்திடம் படிய இது ஒரு காரணமாக அமைந்தது.

மிக இளம் வயதிலேயே திருலோகத்துக்குக் கவிதை எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டதோடு அல்லாமல், பத்திரிகைத் துறையிலும் ஆர்வம் ஏற்பட்டது. அதனால் அவரது 18 வது வயதிலேயே ‘இந்திய வாலிபன்’ என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். பிறகு விழுப்புரத்திற்கு அருகில் பரிக்கல் என்ற சிற்றூரில் ஸ்ரீராம சடகோபன் என்பவர் நடத்தி வந்த ‘தியாகி’ பத்திரிகையின் துணை ஆசிரியராகச் சில மாதங்கள் பணிபுரிந்தார். மந்தஹாசன் என்ற புனைபெயரில் எழுதத் துவங்கிய திருலோகம் சில ஆண்டுகளுக்குப் பிறகு திருலோக சீதாராம் என்ற பெயரிலேயே தன் எழுத்தைத் தொடர்ந்தார்.

கோவை விஞ்ஞானி ஜி.டி நாயுடுவோடு நெருங்கிய நட்பு கொண்டிருந்தார் திருலோகம். ஜி.டி நாயுடு அழைப்பின் பேரில் கோவைக்குச் சென்று பல தடவை பேசியுள்ளார். அவரைப் பற்றி ’தொழில் மன்னர்’, ’அதிசய மனிதர் ஜி.டி. நாயுடு’ என்ற பெயரில் இரு புத்தகங்களை எழுதி வெளியிட்டார். திருலோகத்தின் கவிதை வாழ்வின் சிரமங்களை அறிந்து உனக்கு எதாவது செய்ய வேண்டும், என்ன வேண்டுமானாலும் கேள் தருகிறேன் என்று ஒரு முறை சொல்லியுள்ளார் ஜி.டி. நாயுடு. திருச்சி சீதாலக்ஷ்மி பள்ளிப் பிள்ளைகளுக்குப் பயன் தரும் வகையில் ஒரு பேருந்து வேண்டுமென்று கேட்டு வாங்கி, அதைக் கல்லூரிப் பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்துள்ளார் திருலோகம்.

நவசித்தன் பாரதி என்ற நற்பொருளை நானே பயின்று கொண்டேன் என்று சொல்லிய திருலோகம், பாரதி பாடல்கள் பிரபலமாகாத அந்த நாட்களில் அவர் பாடல்களைப் பாடுவதிலும் அவரைப் பற்றிப் பேசுவதிலுமே தன் வாழ்வின் பெரும் பகுதியைச் செலவிட்டு அதில் உள்ளும் புறமும் தோய்ந்து நின்றார். பாரதியின் தேசியப் பாடல்களைப் பயின்றதன் விளைவால் அவருக்கு நாட்டுப்பற்று மேலும் அதிகமாயிற்று.

பாரதியை இன்று நாம் கொண்டாடி மகிழ்கிறோம். ஆனால், அவர் வாழ்ந்த காலத்தில் அவரை முழுமையாக அறிந்திருந்தவர்கள் வெகு சிலரே. அவர் மறைந்த பிறகு அவரைப் பற்றியும் அவருடைய படைப்புகளைப் பற்றியும் தமிழ்ச் சூழலில் ஒரு கனத்த மௌனம் நிலவியது. அந்த மௌனத்தை அர்த்த புஷ்டியான உரையாடல்களாக சிலர் மாற்றினர். அவர்களுள் வ.ரா, பாரதிதாசன், திருலோக சீதாராம், ஜீவா ஆகியோர் முக்கியமானவர்கள்.

எழுத்தோடும் பேச்சோடும் மட்டும் நில்லாமல், தன் வளமான குரலால் பாரதி பாடல்களைப் பாடியும் மக்களிடம் கொண்டுபோய் சேர்த்தவர் திருலோகம்.

சமூக சீர்திருத்தம் சார்ந்த பாரதியின் பார்வையை வ.ரா முன் வைத்த காலத்தில், அதற்கு இணையாக பாரதியின் இன்னொரு அழகியல் தளத்தை அதன் இசைக் கூறுகளோடு வெளிக்கொண்டு வந்தவர் திருலோக சீதாராம்.
பாரதியின் பாடல்களோடு மட்டுமில்லாமல், பாரதியாரின் குடும்பத்தாரோடும் திருலோகத்துக்கு நெருங்கியஉறவு இருந்தது. பாரதியின் ஆன்மீகப் புத்திரன் என்று அவர் தன்னை அறிவித்துக் கொண்டார்.

பாரதியார் குடும்பத்தாரோடு திருலோகம் எவ்வளவு நெகிழ்ந்த அன்பும் உற்ற உறவும் கொண்டிருந்தாரோ, அது போலவேயான அன்பையும் நட்பையும் பாரதியின் சீடரான பாரதிதாசனோடும் கொண்டிருந்தார். 1944ல் திருச்சி வானொலி நிலையம் நடத்திய கவியரங்கில் பாரதிதாசன், ச.து.சு.யோகியார், ந.பிச்சமூர்த்தி ஆகியோரோடு திருலோகமும் பங்கேற்றுள்ளார்.

திருச்சியில் ஏற்பாடான பாரதிதாசனின் மணிவிழாக் குழுவில் கி.ஆ.பெ.விஸ்வநாதன் தலைமை ஏற்க, அதில் செயலாளராகப் பணியாற்றியவர் திருலோக சீதாராம்.

1951ல் ஒரு முறை பாரதிதசனை நேரில் சந்திக்கும்போது, தான் நடத்திய சிவாஜி இதழின் 17ம் ஆண்டு மலருக்காக சிவாஜி இதழை வாழ்த்திக் கவிதை ஒன்று தருமாறு கேட்டிருக்கிறார் திருலோகம். அந்தக் கவிதை இதுதான்.

"எழுத்தெல்லாம் புதிய நடை
எண்ணமெலாம் தன்னுடைமை எனவே

நாட்டின் பழுத்த பொதுத் தொண்டு செய்வான்
திருலோக சீத்தாராம் பரப்பும் ஏடு

வழுத்துமோர் சிவாஜியெனில்
வண்டமிழ் நாடறியும் அந்த மைந்தனுக்குத்

தழைத்ததுவாம் பதினேழாண்டு
என்று உரைத்தால் மகிழாத தமிழருண்டோ

இவனுயர்ந்தான் அவன் தாழ்ந்தான்
என்னும் இன வேற்றுமையோர் அணுவும் இல்லான்

எவன் பொதுவுக்கு இடர் சூழ்ந்தான் அவன் தாழ்ந்தான்
அஃதில்லான் உயர்ந்தான் என்று

நுவல்வதிலே திருலோகன் அஞ்சா நெஞ்சன்
தக்க நூற்கள் ஆய்ந்தோன்

அவனெழுதிடும் சிவாஜி வாரத்தாள்
வாழிய பல்லாண்டு நன்றே

பல்லேடும் கூடியொரு பழந்தமிழின் சீர்த்தியினை
மறைக்குமாயின்

வில்லோடும் அம்போடும்
வரும் பகையைத் தனி நின்று வீழ்த்துவான் போல்

சொல்லோடும் பொருள் சிறக்கத்
தூய் தமிழின் சீர் சிறக்க எழுதுகின்ற நல்லேடாம் சிவாஜிக்கு
நல்லாசான் திருலோகன் நாளும் வாழ்க!."

காங்கிரஸ் தலைவரும், அன்றைய தமிழக முதலமைச்சருமான காமராஜர் அவர்களோடு திருலோக சீதாராம் நெருங்கிய தொடர்பு

கொண்டிருந்தார். திருலோகம் கவிதைகளின் மீதும் சிவாஜி இலக்கிய இதழ் மீதும் கொண்டிருந்த பெரும் மதிப்பால், அவரை அரசவைக் கவிஞராக நியமிக்க எண்ணி அதைச் சிலரிடம் வெளிப்படுத்தியும் உள்ளார் காமராஜர். அதன் பொருட்டு திருலோகம் சென்னையில் இருப்பது நல்லதென அவருக்கு தெரிவிக்கப்பட, திருச்சியில் இருந்த தனது சிவாஜி பத்திரிகை அலுவலகத்தைச் சென்னை திருவல்லிக்கேணி நல்லதம்பி முதலித் தெருவுக்கு மாற்றிக் கொள்கிறார் திருலோக சீதாராம். ஆனால் பிற்பாடு அது சில அரசியல் காரணங்களால் நடக்க இயலாமல் போனது.

தன்னை முன்னிறுத்துவதைவிடவும் தன் முன்னோர்களை, சக படைப்பாளிகளை, இளைஞர்களை முன்னிறுத்தும் தாய்மை மனம் கொண்ட திருலோகத்தின் வாழ்வு தமிழால் ஆனது. அவர் போன்ற பாரதிப் பித்தர்கள் பாரதியின் புகழ் பரவச் செய்த தொண்டு, பாரதியின் வரலாறு எழுதும் போதெல்லாம் நினைக்கப்படும்.

தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலகட்டம் கு.ப.ரா, ந.பிச்சமூர்த்தி, எம்.வி.வி, தி.ஜானகிராமன் போன்றவர்கள் வாழ்ந்த காலகட்டம். அந்தக் காலகட்டத்தில் அவர்களோடு தன்னையும் இணைத்துக் கொண்டு சிறுபத்திரிக்கை மூலமாகவும் இசை வழியாகவும் தன் வழியில் இலக்கிய சலனங்களை ஏற்படுத்தியவர் திருலோக சீதாராம்.

தமிழ்நாட்டின் பல ஊர்களுக்கு பயணம் செய்து இலக்கிய உரையாற்றியும் பாடியும் வந்த திருலோகம் டெல்லி மேற்கு வங்கம் போன்ற இந்தியாவின் சில மாநிலங்களுக்கும் இலங்கைக்கும் சென்று உரையாற்றி இருக்கிறார். எந்த சபையில் அவர் பேசினாலும் மற்றவர்கள் பேச்சு பெரும்பாலும் எடுபடாது. அப்படி பாடலோடு பேசுவதில் வல்லவர் திருலோகம்.

மாற்று கருத்து கொண்டோரிடமும் அவர் எப்படி பழகியிருக்கிறார் என்பதற்கு அவர் வாழ்க்கை ஒரு உதாரணம். மனு தர்ம சாஸ்த்திரத்தை மொழி பெயர்த்த அவர் தான் நடத்திய எழுத்தாளர் சங்கத்தில் பேச பெரியாரை அழைக்கிறார். தான் நடத்திய சிவாஜி இதழில் பெரியார் புகைப்படங்களை வெளியிட்டு அவர் பற்றி எழுதுகிறார். காமராஜரோடு நெருங்கிய நட்பு கொண்டிருந்த அவர் அண்ணாவோடும் பழகியிருக்கிறார். அண்ணா திராவிட நாட்டில் கவிதைகள் எழுதுங்கள் என்று இவரிடம் கேட்கிறார். எதிர் துருவ நிலைப்பாடு கொண்டிருக்கும் பலரிடமும் ஒரு கலைஞனாக கவிஞனாக எளிமையாக பழகி உள்ளார் என்று இன்றைய சூழலி நினைத்துப் பார்க்கும் போது ஆச்சர்யமாக உள்ளது. பாரதியை பயின்ற

பலரும் பாரதி தாசனோடு அவ்வளவு நட்பு பாராட்டியதில்லை.

கவிதைகளைப் பாடுதல் நம் பழந்தமிழ் மரபு. சங்கம் முதல் பாரதிதாசன் வரை கவிதைகளைப் பாடல்களாகப் பாடிய மரபு கொண்டவர்கள் நாம். அந்தச் சங்க பாணர்களின் நீட்சி போல இயங்கி வந்தவர் திருலோக சீதாராம். தனித்த தத்துவப்பார்வை கொண்ட தன் கவிதைகளால் அதைப் பாடும் விதத்தால் புதியதொரு சௌந்தர்ய ஒலி உலகை சிருஷ்டித்தவர் திருலோக சீதாராம்.

1973இல் கடைசியாக திருலோகம் சென்னை வந்த பொழுது, அவர் சென்னை உட்லண்ட்ஸ் விடுதியில் தங்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு, அங்கேயே வந்து பார்த்திருக்கிறார் ஜெயகாந்தன். உடல் நலம் சரியில்லை, இரண்டு நாட்கள் திருவல்லிக்கேணியில் உள்ள உறவினர் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அதற்குமுன் ஒருநாள் உங்களுடன் இருக்க வேண்டும், முடியுமா என்று ஜெயகாந்தனிடம் கேட்டுள்ளார் திருலோகம். "உங்களோட இருக்கிறதவிட வேற எந்த பெரிய வேலையும் எனக்கில்ல. இந்த தடவை மெட்ராஸ்ல நீங்க இருக்குற வரை நான் தான் உங்களுக்கு சாரதி" என்று சொல்லியிருக்கிறார். அவர் சொன்னபடி, அன்று திருலோகம் எங்கெல்லாம் செல்ல வேண்டுமோ, அங்கெல்லாம் அவரே தன் காரில் அழைத்துச் சென்றுள்ளார். திருலோகம் யாரையேனும் சந்திக்கச் சென்றால், காரில் அமர்ந்தபடியே அவர் வரும் வரை காத்திருந்திருக்கிறார் ஜெயகாந்தன். அதைக் கண்டு "ஒரு டிரைவர் மாதிரி ஏன் இப்படி காத்திருக்கிங்க, நீங்க போங்க, நான் பார்த்துகிறேன்" என்று சொல்லியிருக்கிறார் திருலோகம். "எனக்கு எந்த சங்கடமும் இல்லை. உங்களுக்கு இந்தப் பணிவிடையை எந்த டிரைவர் வேண்னாலும் செய்யலாம். என் வாழ்கைல நான் இப்படி உங்களுக்கு சேவை செய்யற வாய்ப்பு எனக்கு அமையாதில்லையா?" என்று சொல்லியிருக்கிறார் ஜெயகாந்தன்.

இப்படி திருலோகம் வாழ்வில் நடந்த பல சம்பவங்கள் ஆச்சர்யமான அனுபவங்களாக உணர்வின் கணங்களாக சில சமயம் நம்ப முடியாததாக விரிந்து செல்கிறது. அவை வெறும் நிகழ்வுகளோ சம்பவங்களோ அல்ல. நிகழ்காலத் தலைமுறைக்கான படிப்பினைகள்.

தனது பதினெட்டாம் வயது துவங்கி தன் காலம் முடியும் வரையிலும் சிறுபத்திரிக்கை ஆசிரியாகவே வாழ்ந்த திருலோக சீதாராம் 1973ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23ம் தேதியன்று (23.8.1973) தனது ஐம்பத்தி ஆறாம் வயதில் மறைந்தார். அவர் மறைவுக்குப் பின் ஜெயகாந்தன் பேசிய இந்த வார்த்தைகள் அர்த்தம் பொதிந்தவை.

"திருலோக சீதாராம் என்பவர் சதா இங்கே திரிந்து கொண்டிருக்கும் சித்த புருஷர்களில் ஒருவர். அவர் நமக்குத் தோற்றம் காட்டியதும் நம்மிடம் துலங்கியதும் ஒரு அருள். அவர்கள் எங்கேயும் போவதில்லை. தோன்றியது யாவும் மறையும் – சூரியன் தோன்றி மறைவது போல. ஆனால் தோன்றியது யாவும் மறையும் என்றால் என்ன பொருள்? மறைந்தது யாவும் தோன்றும் என்பதுதான். எனவே இந்தப் பொருள் சுழற்சியில் சிக்குண்ட மஹா பாக்யவான்கள் நாம். அவர்களைக் கண்டு கொண்டோம்; அவர்களுடைய சொற்களைக் கேட்டோம்; அவர்களைச் சுமந்தோம். அந்தச் சொற்களையும் கருத்துகளையும் இன்னும் சுமந்துகொண்டு சுவாசித்து வாழ்கிறோம்; வாழ்வோம். இதிலேயிருந்து நமது சந்ததிகள் சுடரோடு பொலிவர்".

திருலோக சீதாராம்:
தேவசபையின் அகங்காரம்மிக்க அதிகாரி.

""

ஞானத்தைப் பகிர்ந்து கொள்ளமுடியும்.
அதிகமாக அதிகமாக-அதைப்பகிரப்பகிர
அதிகமான பிரகாசமும் சாரமும்கொண்டு
பேரானந்தத்தை வாரிவாரி வழங்கும்.
வாழ்வின் பயனே பகிர்தல்தான்.இது ஓர்
அநுபூதி.திருவையாறு லோகநாத ஐயர்
சீதாராம் என்ற திருலோக சீதாராம் இந்த
மாதிரியான பகிர்தலின் சுகத்தை உணர்
ந்து அனைவருக்கும்வாரி வழங்கினார்.

பாவேந்தருக்குத் திருச்சியில் மணிவிழா.
கி.ஆ.பெ விசுவநாதம் ஏதோகாரணத்
தால் பொறுப்பிலிருந்து விலக, விழாக்
குழுவிலிருந்த திருலோகமும் விலகிவி
ட்டார்.விழா நடக்க வில்லை.திருலோகம்
மட்டும் அச்சமின்றி பாவேந்தரைப் பார்க்
கச் சென்றார்.கண்கள் சிவக்க இவரை
விரட்ட- வெளியேறும்போது "உங்களை
எனக்குத் தெரியாது.உங்கள் கவிதைக

ளைத்தான் தெரியும். 'நீங்கள் என்னை
அகற்றினாலும் உங்கள் கவிதைகள்
என்னிடமிருக்கும்.அவை மிகமதிப்புடை
யவை' என்றவுடன் சடாரென எழுந்த பார
திதாசன் திருலோகத்தைக் கட்டித் தழுவி
க்கொண்டு"நீ மறத்தமிழனய்யா' எனப்
பாராட்டினாராம்.பாரதியைப்பற்றி நெடுக
அறிவிப்பதையே லட்சியமாகக் கொண்
டிருந்தார்.அதையே வாழ்நாள் பணியாகா
கிக் கொண்டார்.பாரதியைக் காணாமல்
செய்ய பிரயத்தனப்பட்டதை முறியடித்த
வர்களில் முக்கியமானவர்கள்
வ.ரா,பாரதிதாசன்,திருலோக சீதாராம்
என்ற மூவருமே.

கு.ப.ரா ,ந.பிச்சமூர்த்தி,சிட்டி,சாலிவாகன
ன்,கு.அழகிரிசாமி, ரெட்டியார் என்று
தெலுங்கைத் தம் தாய்மொழியாகக் கொ
ண்ட பட்டாளத்தில் திருலோகம் என்ற
தெலுங்கரும் உண்டு.திருவையாறு- தில்
லைஸ்தானத்தில் தேவசபை என்ற அமை
ப்பு இலக்கியத்தை அமர்க்களமாகவும்
முக்கியமானதாகவும் கொண்டாடியது.
தேவ சபை: நேற்று இறந்து போனவர்க
ள் இன்று தேவர்கள்தாமே என்ற சீதாரா
மின் விளக்கம் சுவையானது.சிதம்பரநா
தமுதலியாரின் 'வட்டத்தொட்டி' மாதிரி
தான் தேவசபை.தம் பெயருக்கு முன்னா
ல் "அம்ருத "என்று போட்டுக் கொண்ட
னர்.தஞ்சாவூர் ஸ்வாமிநாத ஆத்ரேய,
தி.வே.கோபாலையர்,அசோகா செட்டியார்
கரிச்சான் குஞ்சு,கே.ஜி.சேஷாத்ரி,எம்எஸ்
நாடார் நீ.கந்தசாமிப்பிள்ளை போன்ற
ஜாம்பவான்கள் நிறைந்த சபை. முதல்
நாள் அசுரசபை மறுநாள்தேவசபை. 'நான்மட்டுமே பேச
வேண்டும்,எந்தக் கேள்வியும் கூடாது.
நடுவில் குறுக்கிக் கூடாது.முடிந்த பின்
அவரவர் இடத்திற்குத் திருப்பிவிட
வேண்டும்.கேள்விகள் இருப்பின் அடுத்த
டுத்த சபையில் கேட்கலாம்' எனக் கடு

மைகாட்டுவாராம்.அப்போது தி.ந.இரா
மச்சந்திரன் வாலிபர். குறிப்பெடுப்பது
அவர் வேலை.திருலோகம் மிகுந்த அகங்
காரத்தோடு பேசுகிறார் எனப் புகார்
வரும்.எல்லோரையும் ஆட்டிப்படைப்பது
அகங்காரம்தான்.எல்லோருடைய அகச்
காரங்களையும் என்னிடம்தாருங்கள்
அவற்றை நானே ஏற்கிறேன் என்பாராம்.
அந்த இலக்கிய விஷயங்கள் பின்னர்
சிவாஜி இதழில் வெளியிடப்படும்.

பொருளின்மை,வசதிகளின்மை திரு
லோகத்தை ஒருபோதும் சலிப்படைய
வைத்ததில்லை.திருலோகத்தின் வாழ்
க்கையில் பெரிய சாகசங்கள் இல்லை.
மௌனத்தையும் அமைதியையும் தக்க
வைத்துக் கொண்டிருந்தால் அதுவே
சாகசம்.பாரதிபற்றிப் பேசினால் முகம்
தனிச்சோபையாகிவிடும்.ஆனந்தநடனம்
அபிநயம்,ஆக்ரோஷம் கலந்த கலவை
யாக மாறிவிடுவார்."ஆடை குலைந்து
நின்றாள் அவள் ஆவென்று துடிக்கிறாள்
வெறும் மாடுநிகர்த்த துச்சாதனன் அவள்
மைக்குழல் பற்றி இழுக்கின்றான்'என்று
பாடும்போது திருலோகம் ருத்ரதாண்டவ
மாடுவார்.

திருலோகசீதாராம் வறுமையை எதிர்
கொண்ட விதம் அலாதியானது.தஞ்சா
வூரில் ஓர் எழுத்தாள நண்பர் வீட்டிற்கு
அகால வேளையில் செல்வாராம்.என்ன
இருக்கு என்று தயக்கமின்றிக் கேட்டு
விடுவார்.கொஞ்சம் சாதம் இருக்கு அதை
யும் தண்ணீர் விட்டுவைத்தாகிவிட்டது
குடமிளகாய் இருக்கு என்னும்போது
அதை ஆஹா என்று மகிழ்ச்சியோடு
சாப்பிடுவாராம்.சிலர் வீட்டிற்குச் செல்லும்
போது 'சாப்டறீங்களா' என்று கேட்டுவிட்
டால் 'அதற்காகத்தானே வந்திருக்கேன்'
என்பாராம்

கலாமோகினி,மணிக்கொடி இதழ்களோ

டு தொடர்பு ஏற்பட்டபிறகு ஒரு விஷயத்
தைப்புரிந்து கொண்டதாகச் சொல்கிறார்
"எல்லார்க்கும் நன்றாம் பணிதல்" நேரில்
பாடிக்காட்டுவதிலும் கேட்பதிலும் கவியி
ன்பம் முழுமை பெறுகிறது.பாரதியின்
பாடல்களை முறையோடுபாடவேண்டும்
என்று வலியுறுத்தினார்.பாரதியின் சொ
ற்கள் திருலோகத்திற்கு மந்திரச் சொற்கள்.

திருலோகத்தின் படைப்புகள் சொற்பமே.
பேச்சுபேச்சு. பேச்சு. பாரதியைப்பற்றிய
பேச்சு.ஹெர்மான் ஹெஸ்ஸேஎன்பவரின்
படைப்புகளை பேரிலக்கியம் என்றார்.
ஜெர்மானிய பிரம்ம ரிஷி என்றார்.
அவருடைய' சித்தார்த்தன்' என்ற படை
ப்பை அழியாப்பேரிலக்கியம் என்றார்.
அற்புதமாகத்தமிழில்மொழிபெயர்த்தார்.
ஹெஸ்ஸே அவர்களை முனிவர் என்றார்.
ஹெஸ்ஸே மறைந்தபோது துக்கம் கொண்டா
டினார்.தீட்டு அனுஷ்டிக்க முடியலையே
என்று வருத்தமும்பட்டார்.தலை மூழ்கி
விட்டே வீட்டிற்குள் வந்தார்.

கந்தர்வகானம்,புதுத் தமிழ் கவிமலர்கள்,
இலக்கிய படகு,புதுயுகக் கவிஞர்,ஜி.டி
நாயுடுவின் வாழ்க்கை வரலாறு முதலிய
படைப்புகள் அபாரமானவை.பாரதியின்
ஆவேசம் கொண்ட ஜீவன் முக்தர் என்பர்.

'மச்சு வீடுதான்/மாடியில் கூரை/இல்லை
யெனினும் இருள் வான் உண்டே 'என்பது
திருலோகம். " சருகுகளைச் சேகரிப்பதி
லேயே என் காலம் கழிந்துவிட்டது. எனினும்
அவற்றின் அக்னி ஜ்வாலையில் குளிர்
காய முடியாமல் போனது" என்றதும் நம்
திருலோக சீதாராம் தான்.
""""

நா.விச்வநாதன்

திருலோகம் கண்ட மஹாகவி!

https://tamilandvedas.com/tag/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8B%E0%AE%95-%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%8D/

திருலோகம் கண்ட மஹாகவி!
ச.நாகராஜன்

மஹாகவி பாரதியாரை பல்வேறு அறிஞர்கள் நேரில் கண்டு வியந்து அவரது கவித்வத்தைப் போற்றிப் பாராட்டியுள்ளனர். அது போலவே அவரை நேரில் காணவிட்டாலும் கூட அவரின் கவிதைகளில் அவரை தரிசனம் செய்து பிரமித்தவர்களும் ஆயிரக்கணக்கில் உண்டு.

ஆனால் மஹாகவியை நேரில் காணாவிட்டாலும் கூட அவரைத் தனது தந்தையாகப் பாவித்து மானசீக புத்திரனாக மாறி அவருக்கு ஆண்டு தோறும் திதி கொடுத்த ஒரு "அற்புத மகனைப்" பற்றி உலகம் அறியுமா? உலகிலேயே இப்படி ஒரே ஒரு அபூர்வ மகனாகத் திகழ்ந்தவர் திருலோக சீதாராம் அவர்கள்.

அவர் கண்ட மஹாகவி அவருக்குத் தந்தையாய் தாயாய், ஆசானாய் ஏன் எல்லாமாய் இருந்தார்.

மஹாகவி பாரதியார் பிறந்தது 1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி. அவர் மறைந்தது 1921 செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி. திருலோக சீதாராம் பிறந்தது 1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி. அவர் மறைந்தது 1973ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் தேதி.



அதாவது மஹாகவி மறைந்த போது அவர் நான்கு வயதுக் குழந்தை!

இந்த நான்கு வயதுக் குழந்தை மஹாகவியைப் பார்க்காவிட்டாலும் கூட அவனது கவிதைகள் மூலம் அவனையும் அவன் உளத்தையும் நன்கு தரிசித்து விட்டது!

இளம் பருவத்திலேயே கவிதா ஆர்வம் கொண்டு கவிதா ஆவேசம் பெற்ற அவர் தமிழில் தன்னைத் தோய்த்துக் கொண்டார். அவரது தாய் மொழி தெலுங்கு என்றாலும் கூட தமிழின் அமுதச் சுவையைக் கண்டு அதில் மூழ்கிப் போனார். அமிர்தத்தின் ஒரு சொட்டு நம் நாக்கில் பட்டாலும் கூட சாவே வராது. அவரோ தமிழ் அமிர்தத்தில் முழுகியே விட்டார் என்றால் அவருக்கு மறைவு என்பது ஏது?

அத்துடன் மட்டுமல்லாமல் கவிதையை ரசிக்க (தாய்)மொழி ஒரு தடை இல்லை என்பதைத் தான் வாழ்ந்து காண்பித்து நிரூபித்தும் விட்டார் அவர்.

'நவசித்தன் பாரதி என்ற நற்பொருளை நானே பயின்று கொண்டேன்' என்று தன்னிலை விளக்கம் கொடுத்த அவர் அந்த பாரதி பல்கலைக் கழகத்தில், கல்வியில் உயர் பட்டம் பெற்று அதற்கும் மேலான ஆய்வுக்குரிய டாக்டர் பட்டத்தையும் தானே பெற்றுக் கொண்டார்.

மக்களிடையே அவர் பாரதியை எடுத்துச் சென்ற போது மக்கள் வியந்தனர். பாரதியாரின் கவிதைகளைத் தனது பாணியில் நீண்ட நேரம் விளக்கி உரை ஆற்றும் அவர் பாணியில் சொக்கிப் போனவர்கள் ஏராளம். பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பாரதி நோய்வாய்ப் பட்டிருக்கிறார் என்ற தகவலைக் கேட்டதும் தன் பணியை நிறுத்தி நேராக செல்லம்மாள் பாரதியைப் பராமரிக்கும் பணியை விரும்பி மேற்கொண்டார்.

அவரது மடியிலேயே செல்லம்மாள் பாரதி தன் உயிரை விட்டார் என்பது மனதை உருக வைக்கும் ஒரு செய்தி. பாரதியைப் படித்துப் படித்து அவரது வசன கவிதை நடை போலவேதனது நடையையும் அவர் பெற்று விட்டாரோ என்று எண்ணத் தோன்றும் அவரது கட்டுரைகளைப் படிக்கும் போது!எடுத்துக் காட்டாக அவரது எழுத்திலிருந்து ஒரு அருமையான பகுதியை மட்டும் இங்கு மேற்கோளாகப் பார்க்கலாம்.

'இலக்கியப் படகு' என்ற அவரது நூலில் 'கடமை உணர்ச்சி' என்ற கட்டுரையில் வருவது இந்தப் பகுதி. "சங்கற்பம் இல்லாமலேயே ஒருவன் வாழ்வாங்கு வாழும் இயல்புடையவனாகி விடுவது தான் ஒவ்வொருவனுக்கும் உலகத்தில் ஏற்பட்டுள்ள உண்மையான கடமை. அப்படி வாழ்வது தான் பலனை எதிர்பாராமல் செய்கின்ற கரும யோகம்.

பாரதி இதற்கு அருமையானதொரு விளக்கம் கொடுக்கிறார்.

சூரியன் உதிப்பதால் உலகத்தில் இருள் விலகுகிறது. ஒளி வருகிறது, உஷ்ணம் தோன்றுகிறது. மழை பொழிகிறது. உயிர்க்கு அமுதாகிறது. உயிர்கள் வாழ்கின்றன. உலகுக்கு இவ்வளவு நலன்களை இடையறாமற் செய்து கொண்டிருந்த போதிலும் தான் செய்யும் நன்மையும், அந்த நன்மையை அடைபவர் யார் யார் என்ற தகவலும், இதொன்றும் சூரியனுக்குத் தெரியாது. அவன் தருகின்ற ஒளியின் மேன்மையைப் பாராட்டி அவனைப் புகழ்ந்து அவனுக்கு வாழ்த்து மடல் வாசித்தளிப்பதாக இருந்தால் இதெல்லாம் அவனுக்கு விளங்குமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

முதலில் அவனிடம் உள்ள, வேறு எவரிடமும் இல்லாத பேரொளியே அவனுக்குத் தெரியாது.

இருள் என்பது இதுவென்று அவனுக்குத் தெரிந்திருந்தாலல்லவோ, ஒளியென்பதொன்று உண்டு என்று அவனுக்கு விளங்கப் போகிறது. ஆயினும் அவனிடமிருந்து ஒளி வருவதும் அதனால் உலகுய்வதும் எவ்வளவு மகத்தான உண்மை. அதைப் பற்றிய அறிவு சிறிதுமின்றி — ஆனால், அதன் பயனை அனைத்துலகும் பெறத்தக்க ஒய்வற்ற இயக்கம் அவனுடையதாக அமைந்திருக்கிறது.

எவன் ஒருவன் பிறந்ததனால், வாழ்வதனால், பேசுவதால், செய்வதால் உலகமே நலன் பெறுமோ, அத்தகையவன் தனது செயலின் விளைவைப் பற்றிச் சிறிதும் எண்ணமற்றவனாக இருந்து கொண்டே பெரும் பயன் விளையக் காரணனாக இருக்கின்றானோ அவனே நிஷ்காம்ய கர்மி.

ஞாயிற்றை எண்ணி — என்றும்
நடுவு நிலைபயின்று
ஆயிரம் ஆண்டு — உலகில் — கிளியே
அழிவற்று இருப்போமடி


கடமையென்று ஒன்று நம்மை அச்சுறுத்திக் கொண்டிருப்பது போன்ற பாவனையில் நாம் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருந்து கடமையாளனாக விளங்க முயல்வது வீண் தொல்லை. நம் செயல்கள் எல்லாம் கடமையல்லாது வேறில்லை என்றாகி விடுகின்ற இயல்பு வசமாவது போல மானிட வெற்றி பிறிதொன்றில்லை. கடமையுணர்ச்சி சுமையாகும். கடமை இயல்பே இனிதாகும்".

இப்படி அழுத்தம் திருத்தமாக அற்புதமான ஒரு கருத்தை, பாரதியில் தோய்ந்து, எளிய நடையில் இனிய தமிழில் தருபவரை "பாரதியைக் கண்டவர்" என்று தானே கூற முடியும்!

பாரதியை நினைக்கும் போதெல்லாம் அவரது பக்தர்களின் நினைவும் கூட வருவது இயல்பே.

அந்த பக்தர்களின் பட்டியலில் முதலிடம் பெறுகிறார் திருலோக சீதாராம்! திருலோக சீதாராம், பாரதி

இலக்கியப் படகில் ஒரு இனிய பயணம்!



இலக்கிய இன்பம்
இலக்கியப் படகில் ஒரு இனிய பயணம்!
ச.நாகராஜன்

நல்ல நூல்களைப் படிப்பது என்பது அற்புதமாக அமைந்து விட்ட ஒரு விமானப் பயணம் போல அல்லது ஒரு ஆனந்தமான ரயில் பயணம் போல அல்லது அருமையான இயற்கை காட்சிகளின் ஊடே ஒரு படகில் பயணம் செய்வது போல!

தேக்கடியில் படகு சவாரி – கோடைக்கானலில் படகில் பயணம் – அடடா, என்ன ஒரு ஆனந்தம்!

அதே அனுபவத்தை, இலக்கியத்தில் பொருத்த மட்டில், சமகால எழுத்தாளர்களிடம் பெறுவது ஒரு அபூர்வமான விஷயம் தான்! அப்படிப்பட்ட அனுபவத்தைத் தருகிறது, திருலோக சீதாராம் அவர்களின் இலக்கியப் படகு என்னும் நூல்.



சின்னச் சின்னக் கட்டுரைகள்! சுவையான அனுபவங்கள்! அவை தரும் ஏராளமான பாடங்கள்! அதைப் பெறுவதில் ஏக ஆனந்தம் தான். திருலோக சீதாராம் யார் என்று கேட்டால், அவர் அருமை அறிந்து காலத்தால், பெரிதாகக் கொண்டாடப்பட வேண்டியவர் என்று ஒரு வரியில் சொல்லி விடலாம்.

ஆனால் வழக்கமாகத் தமிழர்களின் பழக்க வழக்கம் போல தமிழர்கள் தங்கள் கடமையில் இவரைப் பொருத்த மட்டில் தவறி விட்டார்கள் என்பது நிச்சயம்.

திருச்சி மாவட்டம் பெரம்பலூருக்கு அருகில் உள்ள தொண்டைமான்துறை என்ற ஊரில் திருவையாறு லோகநாத ஐயருக்கும்

மீனாட்சி சுந்தரம்மாளுக்கும் 1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று திருலோக சீதாராம் பிறந்தார்.

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் தமிழுக்கே தன்னை தாரை வார்த்துக் கொடுத்து விட்டார்.

மூன்று வயது என்ற மிக இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். மாமா வீட்டிற்கு இடம் பெயர்ந்து தாயின் அரவணைப்பில் வளர ஆரம்பித்தார். லலிதா என்று ஒரு தங்கை. பஞ்சாபகேசன் என்று ஒரு தம்பி.

1936ஆம் ஆண்டு தனது 19ஆம் வயதில் அந்தக் கால வழக்கப்படி மிக சிறு பருவத்தில் இருந்த 10 வயதான ராஜாமணியைத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் தம்பதியினருக்கு 3 பெண் குழந்தைகளும் நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தன. பெண்கள் – மதுரம், வஸந்தா, இந்திரா. ஆண்கள் பசுபதி, சுப்பிரமணியன், முரளிதரன், ராமகிருஷ்ணன்.

இயல்பாகவே தமிழின் பால் அபார ஈடுபாடு கொண்ட திருலோக சீதாராம் கவிதைகளை ரசிக்க ஆரம்பித்தார். தானே அற்புதமாக கவிதைகளையும் இயற்றலானார். உரை நடையில் தனிப் பாணியில் தன் நடையை அமைத்துக் கொண்டு உரை நடை மன்னனாகத் திகழ்ந்தார்.

தமிழ் ஆர்வம் இவரை உந்தியது. ஆகவே 18ஆம் வயதிலேயே 'இந்திய வாலிபன்' என்ற பத்திரிகையைத் தொடங்கினார் 1934ஆம் ஆண்டு சிவாஜி என்ற சொந்தப் பத்திரிகையைத் தொடங்கினார். அதன் மூலம் தமிழ் உலகம் முழுவதுடனும் தொடர்பு கொண்டார்.

இவரது கட்டுரைகளின் தொகுப்பாக இலக்கியப் படகு அமைந்துள்ளது. மொத்தம் 60 கட்டுரைகள். சில கட்டுரைகள் தங்கம். சில வெள்ளி. சில வைரம். சில மாணிக்கம். சில முத்து. சில கோமேதகம்.

ஆமாம், விலையே சொல்ல முடியாத அபூர்வ உயர் ரத்தினங்களையும் தங்கம் வெள்ளி உள்ளிட்டவற்றையும் தன் தமிழ்க் கட்டுரைகள் மூலமாக இவர் தமிழ் மக்களுக்குப் பரிசாக அளித்து விட்டார்.

ராஜம் ஐயர் விழா பற்றி ஒரு கட்டுரை. 26 வயதே வாழ்ந்த தத்துவ, இலக்கிய மன்னனைப் பற்றி அறிகிறோம். புட்டபர்த்தி சத்யசாயி பாபா பற்றி ஒரு கட்டுரை. வானத்துத் தாரகை வந்த விவரத்தை அறிகிறோம். சின்மயானந்தரின் ஆங்கிலம் பற்றி ஒரு கட்டுரை. அற்புதமான ஆங்கிலத்தில் கடினமான தத்துவங்களை எளிதாகத் தந்த அவரின் பெருமையைக் காண்கிறோம்.

15-5-1961 அன்று எழுதிய கட்டுரை : தேடும் பொருள். இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கும்பகோணத்தில் ஒரு கடையில் தாம்பூலத்தை

வாங்குகிறார் கவிஞர். வீட்டிற்கு வந்து பார்த்தால் ஒரு ஐந்து ரூபாயைக் காணோம். உடனே அதே கடைக்குச் செல்கிறார், பார்க்கிறார், ஊஹூம், அதைக் காணோம். சரி, போகட்டும் என்று விட்டுவிடவில்லை. இருபது ஆண்டுகளாக அங்கு போகும் போதெல்லாம் அந்தக் கடைக்குப் போகாமல் இருப்பதில்லை. தனது ஐந்து ரூபாய் "ஒருவேளை, அங்கு இருக்குமோ" என்று பார்க்கத் தவறியதுமில்லை. "அட, அது அங்கு இன்னும் இருக்குமா?" புத்திக்கு இது தெரியாதா? மனதின் மர்மத்தை யாரால் அறிய முடியும்?

இதில் தனது அறிவையும் கவனத்தையும் யாதொன்றும் தப்பிச் செல்லகூடாது என்ற மமகாரத்தை இனம் காண்கிறார் கவிஞர். இப்படி ஆரம்பிக்கும் கட்டுரை மனித வரம்பின் பல பரிமாணங்களைக் காண்பித்து வினோபா, காந்தியடிகளைச் சுட்டிக் காட்டி பாரதசக்தி புதிய செய்தியை விளக்கப் போவதைச் சொல்லி முடிகிறது.

வாழ்க்கையும் இலக்கியமும் என்னிடம் இப்போதைக்கு இருக்கின்றன என்று கூறும் கவிஞர் தனது இலக்கியப் படகு பற்றி அற்புதமாக விவரிக்கிறார்.

"இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு எங்கெங்கும் எல்லாக் காலத்தும் இயங்கத்தானே இலக்கியப் படகு! அமர லோகத்துக்குப் போய் அடுப்பு மூட்ட வேண்டிய அவசியமென்ன?"

கேள்வி, சரியான கேள்வி தான்! அவருடன் அவர் படகில் "நைஸாக" ஒட்டிக் கொண்டு பயணம் போவது என்பது எவ்வளவு சுகமான ஒரு அனுபவம்!

"படகு அசையும் போதெல்லாம் ஒவ்வோர் அசைவும் ஓர் இன்ப அனுபவம். எத்துணைத் தோழர்களைப் பார்க்கிறேன். எத்துணைப் படகுகள்! எத்துணை எத்துணை வியப்புகள்! சற்றே படகு செலுத்தி விளையாட உடன் வருவோர் உண்டு. எனது படகில் கூட வருவோருடன் இருக்கலாம்."

ஆஹா, கவிஞரே இப்படி அனுமதி தந்து விட்டார் இல்லையா? பிறகு என்ன தயக்கம்!

எல்லா அன்பர்களும் உல்லாசமாக கவிஞரின் இலக்கியப் படகில் ஒரு இனிய பயணத்தை ஆரம்பிக்கலாமே!

பாரதியாருடனான இவரது ஆத்மார்த்தமான ஆன்மீகத் தொடர்பு பவித்திரமானது. அதைப் பற்றித் தனியே தான் ஒரு கட்டுரை எழுத வேண்டும். அவ்வளவு பெரிய விஷயம் அது.

பெரிய சாதனைகளை விளம்பரம் இல்லாமல் செய்த திருலோக சீதாராம் தனது ஐம்பத்தி ஆறாம் வயதில் 23-8-1973 அன்று மறைந்தார். என்றபோதிலும் அவர் பூதவுடல் மறைந்தாலும் புகழ் உடம்பு மறையாது. அவர் நினைவை என்றும் போற்றுவோம்! **

இலக்கியப் படகு 198 பக்கங்கள் கொண்ட அருமையான நூல். விலை ரூபாய் 200/ உயர்ந்த தாளில் நேர்த்தியாக அச்சடிக்கப்பட்டுள்ளது.

நூலைப் பெற, ஜி.ஆர். பிரகாஷ் 9488185920/9940985920 அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

வெளியிட்டோர் : பவித்ரா பதிப்பகம், 24-5, சின்னம்மாள் வீதி, கே.கே.புதூர், (Post), கோவை – 38, தமிழ்நாடு, இந்தியா

திருலோக சீதாராம்

By ஏ.ஆர்.இராஜமணி

திருலோக சீதாராம்-ஏ.ஆர்.இராஜமணி; பக்.104; ரூ.50; சாகித்திய அகாதெமி, குணா பில்டிங்ஸ், 443, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18.

திருவையாறு லோகநாதய்யர் சீதாராமன் என்கிற திருலோக சீதாராம் அகத்திய முனிவரைப்போல் குள்ளமான உருவம் தாங்கியவர். பளிச்சென்று குங்குமப் பொட்டும் வெற்றிலைச் செல்லமுமாக எந்த நேரமும் உலா வந்தவர். "கந்தர்வ கானம்' என்னும் கவிதைப் படைப்பால் புகழ் பெற்றவர். சிறந்த மேடைப் பேச்சாளருமான அவர் "சிவாஜி' இதழின் ஆசிரியர். அவருடைய "சித்தார்த்தன்' மொழிபெயர்ப்பு சிறப்பு மிக்கது. பாரதி புகழ் பாடியும் பரப்பியும் பாரதி கவிதைகளை மேடையில் உணர்வுடன் பாடியும் பாரதிப் பித்தராக விளங்கியவர். ஓர் அசாதாரண மனிதரான திருலோக சீதாராமைப் பற்றிய ஏராளமான விவரங்களை தமிழ்ப் படைப்பாளர்களுடன் நெருங்கிய நேசம் பூண்ட நூலாசிரியர் தனது நூலின் மூலம் வாசகர்களுக்குத் தந்துள்ளார். "கவிஞர் திருலோக சீதாராம் குரலில் நேரிடையாகப் பாஞ்சாலி சபத காவியத்தைக் கேட்க கொடுத்து வைத்தவர்கள் பெரும் புண்ணியம் செய்தவர்கள். எனக்கு அந்தப் பெரும்பேறு கிட்டியதில் எப்போதும் பெருமிதம்' என்று அவர் குறிப்பிட்டுள்ளது நமக்கு அந்த பாக்கியம் கிட்டவில்லையே என ஏங்க வைக்கிறது. "ஏராளமான ரசிகர்களைப் பெற்றிருந்த திருலோக சீதாராம் பொருளாதார வசதியை அடையவே இல்லை என்பது நெஞ்சைப் பிழியும் நிஜம்" என்று நூலாசிரியர் வேதனையுடன் பதிவு செய்துள்ளார்.

https://web.archive.org/web/20141219062743/http://www.dinamani.com/book_reviews/2014/09/21/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8B%E0%AE%95-%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%8D/article2442722

திருலோக சீதாராம் என்றொரு கவியாளுமை

By பாவண்ணன்

https://puthu.thinnai.com/2016/06/28/%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%b0%e0%af%81%e0%ae%b2%e0%af%8b%e0%ae%95-%e0%ae%9a%e0%af%80%e0%ae%a4%e0%ae%be%e0%ae%b0%e0%ae%be%e0%ae%ae%e0%af%8d-%e0%ae%8e%e0%ae%a9%e0%af%8d%e0%ae%b1%e0%af%8a%e0%ae%b0%e0%af%81/

சமீபத்தில் நாளிதழில் ஒரு செய்தியைப் படித்தேன். எழுத்தாளர் விவேக் ஷான்பாக் தலைமையேற்ற ஒரு குழு எழுத்தாளர்களைப்பற்றிய ஆவணப்படங்களை எடுப்பதற்கான கருத்துருக்களை ஓர் அமைப்பின் சார்பில் பரிசீலனை செய்து, அவற்றை அனுப்பியவர்களை நேர்காணல் செய்து, இறுதிச்சுற்றில் தகுதி பெற்ற நான்கு பேர் கொண்ட பட்டியலை அறிவித்திருந்தது. இந்த அமைப்பைப்போலவே அரசு சார்ந்ததும் சாராததுமான பல அமைப்புகள் கன்னடத்தில் ஆவணப்பட ஆக்கத்தில் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகின்றன. படங்கள் முடிவடைந்ததும் பொதுமக்களுக்காக அவை திரையிடப்படுகின்றன. நான் பத்து படங்களுக்கும் மேல் பார்த்திருக்கிறேன். பார்க்காதவை ஏராளமாக இருக்கும். பல தேசிய விருதுகளைப் பெற்ற திரையுலக இயக்குநரான கிரீஷ் காஸரவல்லி சமீபத்தில் எழுத்தாளர் யு.ஆர். அனந்தமூர்த்தியைப்பற்றிய ஆவணப்படத்தை இயக்கி வெளியிட்டார். கன்னடச்சூழலைப்பற்றிய ஒரு சிறிய குறுக்குவெட்டுச் சித்திரம் இது. தமிழில் இப்படி நிகழவில்லையே என்கிற ஆதங்கத்தால் இதைக் குறிப்பிட்டு எழுத வேண்டியிருக்கிறது. மறைந்த கவிஞர் திருலோக சீதாராம் அவர்களைப்பற்றி ரவிசுப்பிரமணியன் எடுத்திருக்கும் ஆவணப்படத்தைப் பார்த்ததன் விளைவாக அந்த ஆதங்கம் பொங்கியெழுகிறது. ஒவ்வொரு படத்தையும் தொடங்கி முடிப்பதற்காக அவர் மேற்கொள்ளும் முயற்சிகளையும் அலைச்சல்களையும் அறிந்தவன் என்கிற நிலையில் என் ஆதங்கம் பல மடங்காகப் பெருகுகிறது.

பெரியபெரிய நிறுவனங்களின் ஆதரவின் துணையோடு இந்திய மொழிகளில் ஆவணப்படங்கள் உருவாகும் சூழலில் தமிழில் ரவி சுப்பிரமணியன் போன்றோர் தம் கைப்பணத்தையும் நேரத்தையும் செலவு செய்து ஆவணப்படங்கள் எடுக்கிறார்கள். தமிழ்சூழல் மீதும் தமிழ்ப்படைப்பாளிகள் மீதும் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையே, எல்லா இழப்புகளையும் கடந்து இத்துறையை நோக்கி அவரைச் செலுத்திக்கொண்டிருக்கிறது. தமிழுலகம் ரவி சுப்பிரமணியன் போன்றோருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

திருலோக சீதாராம் மறைந்து பல ஆண்டுகளாகின்றன. இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் அவருடைய நூற்றாண்டே வரப்போகிறது. ஆனால் இந்த

ஆவணப்படத்தைப் பார்த்துமுடித்த தருணத்தில் நம்மிடையே அவர் இன்னும் வாழ்ந்துகொண்டிருப்பவர் என்னும் எண்ணம் சட்டென எழுந்ததை உணர்ந்தேன். ஏன் அப்படி நினைத்தேன் என ஒருகணம் யோசித்த பிறகுதான் புரிந்தது. படைப்பாளிகள் மரணமற்றவர்கள். அவர்களுடைய உடல் மறைந்தாலும் அவர்கள் தம் படைப்புகளில் தொடர்ந்து உயிர் வாழ்கிறவர்கள். மரணமில்லாப் பெருவாழ்வு வாழும் பேறு பெற்றவர்கள். 'இலக்கியப்படகு' கட்டுரைத்தொகுதியும் 'சிவாஜி' இதழ்த்தொகுதியும் 'சித்தார்த்தன்' மொழிபெயர்ப்பும் தமிழில் நிலைத்திருக்கும் வரை, திருலோக சீதாராம் என்னும் பெயரும் வாழ்ந்துகொண்டிருக்கும்.

பாரதியாரை நேரில் பார்க்கக் கிடைக்காத முதல் தலைமுறையைச் சேர்ந்தவர் திருவையாறு லோகநாத சீதாராம் என்னும் திருலோக சீதாராம். ஆனால் பாரதியார் பாடல்களில் மனம்தோய்ந்தவர். இசையோடு பாடத் தெரிந்தவர். தமிழகம் முழுதும் பாரதியார் பாடல்களைப் பாடிப்பாடி பரப்பியவர். பாடிப்பாடி பாரதியாருடைய பாடல்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்துவிட்டவர். அவர் பாடும் விதம் பற்றி சேக்கிழார் அடிப்பொடி டி.என்.ராமச்சந்திரன், அசோகமித்திரன், சத்தியசீலன் போன்றோர் சொல்லச்சொல்ல, அவர்களெல்லாரும் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது.

சீராகப் பாய்ந்துவரும் நதிப்பெருக்கோடு கவி ஆளுமையான திருலோகத்தைப்பற்றிய ஆவணப்படம் தொடங்குகிறது. காலமென்னும் நதி, மொழியென்னும் நதி, இலக்கியமென்னும் நதி, பண்பாடென்னும் நதி என பல சொற்கள் மனத்தில் மின்னிமின்னி மறைகின்றன. விவேகானந்தர் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்த பாறையை நம் பண்பாடு அவருடைய நினைவைப்போற்றும் இடமாகவே மாற்றி நிலைநிறுத்திக்கொண்டதுபோலவே, திருலோக சீதாராம் அமர்ந்து பாரதியார் பாடல்களைப் பாடிய காவேரிக்கரையில் இன்னும் திருலோகம் வாழ்ந்துகொண்டே இருக்கிறார் என்றே எண்ணத் தோன்றியது. அக்கணத்தில் அவர் குரலும் மூச்சுக்காற்றும் சுற்றிச்சுற்றி வரும் இடமாகவே காவேரிக்கரை காட்சியளித்தது. ஒருகணம் புறநானூற்றுக் கவிஞர் காவற்பெண்டு எழுதிய பாடல்வரிகள் மனத்தில் நகர்ந்தன. அந்தப் பாட்டில் 'நின்மகன் யாண்டுளன்?' என்று ஒரு தாயிடம் தோழிகள் கேட்கிறார்கள். அதற்கு 'புலி சேர்ந்து போகிய கல் அளை போல ஈன்ற வயிறே இதுவே, தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' என்று பதில் சொல்கிறாள் அந்தத் தாய். அவளுடைய ஈன்ற வயிற்றைப்போல திருலோக சீதாராம் நின்று, அமர்ந்து, நடந்து, பாடி மகிழ்ந்த கரை இது எனச் சொல்லாமல் சொல்வதுபோல அந்தக் காட்சியை வடிவமைத்திருக்கிறார் ரவிசுப்பிரமணியன். திருலோக சீதாராமைப்பற்றி உரையாடும் ஆளுமைகள் மாறும்தோறும் இடம்பெறும் நதியின் காட்சி, 'அவர் எங்கும் செல்லவில்லை, இதோ இங்கே இருக்கிறார்' என்று மௌனமாகச் சுட்டிக்காட்டியபடி இருக்கிறது. நதியைத் தொடர்ந்து

விட்டுவிடுதலையாகிப் பறக்கும் குருவியையும் வானத்தையும் திரையில் பார்த்ததும் திருலோகத்தையே அந்தக் குருவியாக நினைத்துக்கொண்டேன்.

டி.என்.ராமச்சந்திரன் மனமுருக உரையாடும் சொற்கள் வழியாக திருலோகத்தின் சித்திரம் மெல்ல மெல்ல உருவாகித் திரண்டு வருகிறது. மன்னர் மன்னன், சத்தியசீலன், சக்தி, கிருஷ்ணசாமி ரெட்டியார், அசோகமித்திரன் போன்றோர் பகிர்ந்துகொள்ளும் அனுபவங்கள் ராமச்சந்திரன் உருவாக்கிய சித்திரங்களுக்கு வலிமை சேர்ப்பதாக உள்ளன. 'முன்னொரு பாடல் எழுதினேன், அதன் மூலப்பிரதி கைவசம் இல்லை' என்று அவர் திருலோகத்தின் கவிதையொன்றை அவர் மனப்பாடமாகவே சீரான தாளக்கட்டோடும் மன எழுச்சியோடும் பாடும் கணத்தில் மனம் நிரம்பித் தளும்பியது. அவருக்கும் திருலோகத்துக்கும் இடையிலான நெருக்கத்தை ஒவ்வொரு சொல்லிலும் உணரமுடிகிறது.

திருலோகத்துக்கு ஆசிரியராக இருந்த அந்தகக்கவி ராமசாமிப்படையாச்சி என்னும் பெயரை முதன்முதலாக ரவிசுப்பிரமணியன் பதிவு செய்திருக்கிறார். ஆவணப்படம் வழியாக அறிய நேர்கிற பாரதிதாசன், கொத்தமங்கலம் சுப்பு, ஜி.டி.நாயுடு போன்றோரைப்பற்றிய சித்திரங்கள் ஒவ்வொன்றும் சுவாரசியமானவையாக உள்ளன.

சிறப்பிதழுக்கு ஒரு கவிதை எழுதிக் கொடுக்கும்படி திருலோகம் பாரதிதாசனிடம் கேட்டபோது, அவர் திருலோகத்தை வாழ்த்தி ஒரு பாடல் எழுதிக் கொடுத்துவிட்டு "உன்னைப் புகழ இந்த மண்ணில் இருப்பவர்களுக்கு மனமில்லை, இது ஒரு தொடக்கமாக அமைந்து, அந்தப் புகழ்ப்பஞ்சம் விலகட்டும்" என்று சொல்வதாக இடம்பெறும் குறிப்பு திருலோகத்தின் தன்னலமற்ற மனப்போக்கை எடுத்துரைப்பதாக உள்ளது. ஒருமுறை பாரதிதாசனுக்கு நிதியளிப்பு விழா ஒன்றை ஏற்பாடு செய்கிறார்கள். நிதிதியைத் திரட்டும் பொறுப்பு திருலோகத்திடம் வழங்கப்படுகிறது. ஆனால் பாரதிதாசன் நிகழ்ச்சிக்கு வரவில்லை. அதனால் அவருக்கு மன உளைச்சல். பாரதிதாசனை நேரில் சந்தித்து பணமுடிச்சைக் கொடுத்துவிட்டுச் செல்வதற்காக அவரே புதுச்சேரிக்கு வருகிறார். அப்போதும் விவாதம். ஒரு கட்டத்தில் "எங்களுக்கு நீங்கள் வேண்டாம். உங்களுடைய பாடல்கள் போதும்" என்று பொதுவாகச் சொல்கிறார் திருலோகம். மனம் கரைந்துபோன பாரதிதாசன் திருலோகத்தைத் தன் வீட்டில் உண்டுவிட்டுச் செல்லும்படி சொல்கிறார். திருலோகம் தன் பழக்கத்தை அனுசரிப்பதிலிருந்து விலகிவிடக்கூடாது என்பதற்காக, அவர்பொருட்டு பக்கத்து வீட்டிலிருந்து திருநீறு எடுத்துவர ஏற்பாடு செய்து கொடுக்கிறார் பாரதிதாசன்.

இன்னொரு முறை கடற்கரையில் அமர்ந்தபடி கொத்தமங்கலம் சுப்புவின் பாடல்களை ரசனையோடு பார்க்கிறார். அக்கம்பக்கத்தில்

அமர்ந்திருந்தவர்களும் அந்தப் பாட்டைக் கேட்கிறார்கள். தற்செயலாக அங்கே கடற்கரைக்கு வந்திருந்த சுப்புவும் அந்தப் பாட்டைக் கேட்கிறார்கள். மகிழ்ச்சியோடு திருலோகத்தின் அருகில் சென்று "இது யார் எழுதிய பாட்டு தெரியுமா?" என்று கேட்கிறார். திருலோகம் தெரியாது என தலையசைக்க, சுப்பு "நான் எழுதியதுதான்" என்று அறிமுகப்படுத்திக்கொள்கிறார். "மிகவும் அழகாகப் பாடுகிறாய்" என்று மனம் திறந்து பாராட்டிவிட்டுச் செல்கிறார் சுப்பு.

ஜி.டி.நாயுடுவும் திருலோகமும் ஒருவர்மீது ஒருவர் நல்ல மதிப்பை உடையவர்களாக இருந்தார்கள். "உங்களுக்கு ஏதாவது செய்யவேண்டும், ஏதேனும் கேளுங்கள்" என்று ஒருமுறை ஜி.டி.நாயுடு திருலோகத்திடம் கேட்கிறார்.. திருலோகம் தமக்கென எதுவும் கேட்காமல், தம் பகுதிகளில் வசிக்கும் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதற்குப் படும் சிரமங்களை எடுத்துரைக்கிறார். அதைக் கேட்ட நாயுடு அந்தப் பிள்ளைகள் பள்ளிக்கு வந்து செல்ல ஒரு பேருந்தையே ஏற்பாடு செய்கிறார்.

ஒவ்வொரு காட்சியும் நேர்த்தியாக இருக்கிறது. ஒன்றோடு ஒன்று பொருந்தியிருக்கும் வகையில் கச்சிதமாக இணைக்கப்பட்டிருக்கிறது. தேவைப்படும் நேரங்களில் மட்டும் திருலோகத்தைப்பற்றிய தகவல்களைச் சொல்லவும் திருலோகத்தின் கவிதை வரியைப் படிக்கவும் ரவியின் குரல் தோன்றி மறைகிறது. திருலோகத்தைப்பற்றி இன்னும் கொஞ்சம் கேட்டால் நன்றாக இருக்குமேயெனத் தோன்றும் தருணத்தில் படம் முடிவடைந்துவிடுகிறது. சிறிதும் தொய்வில்லாமல் நெய்யப்பட்ட பட்டாடைபோல நீண்டு சென்ற ஆவணப்படத்தைப் பார்த்த அனுபவம் இன்று கிட்டிய அனுபவங்களில் மிகமுக்கியமானது. ரவி சுப்பிரமணியத்துக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

01] **திருலோக சீதாராம் (1917-1973)**

நினைவலைகள் | செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம்

https://www.youtube.com/watch?v=wSAiv71Dg9U [2:01:57]

சிறப்புரை :

திருமிகு. சுப்ரமணியம் சீதாராம்
வங்கிப் பயிற்சியாளர்

தலைப்பு : "கவி வழி வாழ்க்கை"

சிறப்புரை :

திருமிகு. ரவிசுப்ரமணியன்

கவிஞர்
ஆவணப்பட இயக்குனர்

தலைப்பு : "திருலோகம் என்றொரு கவி ஆளுமை"

02] Thiruloga Seetharam Documentary By Ravisubramaniyan

Thiruloga Seetharam Documentary By Ravisubramaniyan [1:11:49]

பாரதி அன்பர், எழுத்தாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர்,
பத்திரிக்கையாசிரியர் திருலோக சீதாராம் பற்றி கவிஞர்
ரவிசுப்பிரமணியன் இயக்கிய ஆவணப்படம் இது.

03] **எஸ். ராமகிருஷ்ணன் உரை @ கவிஞர் திருலோக சீதாராம் நூற்றாண்டு விழா**

https://www.youtube.com/watch?v=-I9yKtsvsU8 [20:21]

ஆம்பல் கலை இலக்கிய அறக்கட்டளை நடத்திய
கவிஞர் திருலோக சீதாராம் நூற்றாண்டு விழாவில்
எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் உரை

04] **செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் | தே. சங்கர சரவணன்**

https://www.youtube.com/watch?v=KFtGYNE9dEA [1:03:58]

செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் - 8
சாகித்திய அகாடமி விருதாளர்
"கவிபேரரசு" வைரமுத்து அவர்களின்
72வது பிறந்தநாள் சிறப்பு நிகழ்வு

தலைப்பு :

"கவிஞராற்றுப்படை"
சிறப்புரை

முனைவர் தே. சங்கர சரவணன்

முதல்வர்,
அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையம்
தமிழ்நாடு அரசு

05] **அண்ணா நூற்றாண்டு நூலகம் - செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் 9 "அண்ணா நாற்பது"-முனைவர்.தே.சங்கர சரவணன்**

https://www.youtube.com/watch?v=EjDDL_xnKcs [1:30:57]

பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்த நாள் சிறப்பு நிகழ்வு
அண்ணா நூற்றாண்டு நூலகம் - செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் - 9

முனைவர். தே. சங்கர சரவணன்

முதல்வர்,
அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம்,

தமிழ்நாடு அரசு, சென்னை-28.
தலைப்பு
'அண்ணா நாற்பது"
(அண்ணா எழுதிய, அண்ணா குறித்து எழுதப்பட்ட 40 நூல்களை அறிமுகம் செய்யும் பேருரை)
15.09.2025

06] **செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் | முனைவர். தே. சங்கர சரவணன்**

https://www.youtube.com/watch?v=nUxlbz6v2Do [1:07:41]

செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் - 4
எழுத்தாளர் புதுமைபித்தன் அவர்களின்
119-வது பிறந்த நாள் சிறப்பு நிகழ்வு

சிறப்புரை :

முனைவர். தே. சங்கர சரவணன்
இணை இயக்குனர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

தலைப்பு :

"இன்னும் கோபிக்க வைக்க ஆசைப்பட்டவர்"

07] **செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் - முனைவர் மறைமலை இலக்குவனார்**

https://www.youtube.com/watch?v=0RKAPq0Tj1Y [1:06:25]

செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம் - 1
பேராசிரியர் சி. இலக்குவனார்
116 ஆவது பிறந்த நாள் சிறப்பு நிகழ்வு

சிறப்புரை :

முனைவர் மறைமலை இலக்குவனார்
இயக்குனர்
உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம்,
சென்னை.

(😊)(😊) திருலோக சீதாராம் (😊)(😊)